குழித்தட்டு முறையில் காய்கறி நாற்றங்கால் பராமரிப்பு

First Published : 10 Feb 2011 04:09:17 AM IST



விழுப்புரத்தை அடுத்த பிடாகம் கிராமத்தில் வீரிய ஒட்டுரக காய்கறி பயிர்களுக்கான நாற்றங்கால்களை குழித்தட்டு முறையில் பயிரிட்டுள்ள விவசாயியிடம் பராமரிப்பு

விழுப்புரம்: தண்ணீர் வசதியுடன் கூடிய புஞ்செய் நிலங்களில் பொருளாதார ரீதியாக அதிக வருமானத்தை தரக்கூடிய வீரிய ஒட்டுரக கத்திரி, வெண்டை, தக்காளி, மிளகாய், பிரெஞ்ச் பீன்ஸ், முட்டைகோஸ், காலிபிளவர் போன்ற காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வருவது அவசியமானது என்று தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் பரிந்துரை செய்கின்றனர்.

குறிப்பாக கத்திரி, மிளகாய், தக்காளி, வெண்டை பயிர்களில் விவசாயிகள் வழக்கமாக சாகுபடி செய்யும் உள்ளூர் ரகங்களை தவிர்த்து வீரிய ஒட்டுரக காய்கறிகளின் விதைகளை பயிரிடுவதால் கூடுதலாக மகசூல் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

மேலும் தைப்பட்டத்துக்கான காய்கறி நாற்றுக்களை வழக்கமான முறையில் உற்பத்தி செய்யும்போது பருவநிலை காரணமாக சேதாரமடைய வாய்ப்புள்ளது. இதற்கு மாற்றாக விவசாயிகள் பாதுகாக்கப்பட்ட நிழல்வலை கூடாரங்களிலோ அல்லது சூரிய வெளிச்சத்துடன் கூடிய சிறிய நிழல் கொட்டகைகள் அமைத்தோ அவைகளில் குழித்தட்டு முறையில் நாற்றுக்களை பராமரித்து பருவநிலை காரணமாக நாற்றுக்களுக்கு ஏற்படும் சேதாரத்தை தவிர்த்து வாளிப்பான காய்கறி நாற்றுக்களை உற்பத்தி செய்து பயன் பெறலாம்.

நாற்றங்கால்களை குழித்தட்டு முறையில் பராமரிப்பது எப்படி என்பது குறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் முனைவர் க. வீராசாமி கூறியது:

குழித்தட்டுகளை தென்னை நார்க்கழிவு அல்லது மண்புழு உரம், மணல் மூலம் தயார் செய்த கலவை கொண்டு நிரப்ப வேண்டும். தென்னை நார்க்கழிவு குழி நிரப்பு பொருள் நிரப்பிய 10 தட்டுகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, அழுத்தம் கொடுக்க வேண்டும்.

பின்னர் ஒவ்வொரு குழியிலும் 0.5 செ.மீ. ஆழத்துக்கு சுண்டு விரல் மூலம் குழி ஏற்படுத்தி தட்டுக்களை நடவுக்கு தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு குழிக்கும் ஒரு விதை வீதம் விதைப்பு செய்து செடி வளர்பொருள் (தென்னை நார்க்கழிவு) கொண்டு மூட வேண்டும். தென்னை நார்க்கழிவினை 300, 400 சதவீத ஈரப்பத நிலையில் உபயோகிக்கும்போது தட்டுக்களுக்கு விதைப்புக்கு முன்பாகவும், பின்னரும் நீர்பாய்ச்ச தேவையில்லை.

விதைப்பு செய்த தட்டுகளை 10 தட்டுகள் கொண்ட அடுக்குகளாக ஒன்றன் மீது ஒன்றாக பயிறுக்கேற்றவாறு 3 முதல் 6 நாள்களுக்கு அடுக்கி வைத்து அவற்றின் மேல் பாலித்தீன் தாள் கொண்டு காற்றோட்டமாக மூட வேண்டும்.

இது தட்டுகளில் உள்ள ஈரப்பதத்தை விதைகள் முளைக்கும் வரை நிலை நிறுத்துகிறது. விதைகள் முளைத்தவுடன் செடிகள் வளைந்து போவதைத் தவிர்க்க முளைப்பு கண்டுள்ள தட்டுகளை நிழல் வலைக் கூடாரங்களுக்கு மாற்றி சிறு வலைக் கூடாரங்களில் பாலித்தீன் தாள் மூடாக்கு அமைத்து பராமரிக்க வேண்டும்.

தினமும் தட்டுகளில் உள்ள ஈரப்பத நிலைக்கு ஏற்றவாறு பூவாளி மூலம் தட்டுகளுக்கு நீர்ப்பாசனம் செய்து பராமரிக்கவும், பயிர்சத்துகள் கரைந்து வீணாவதை தவிர்க்க அதிக நீர்ப்பாசனத்தை தவிர்க்கவும்.

முளைப்பு கண்டுள்ள தட்டுகளுக்கு காப்பர் ஆக்சி குளோரைடு 0.2 சதவீதம் அல்லது கார்பன்டாசிம் 0.1 சதவீதம் மருந்து கொண்டு பயிர் பாதுகாப்பு செய்து நாற்றுகள் மடிவதை தவிர்க்கவும்.

நாற்றுகள் வெளுப்பாக தென்பட்டால் 19:19:19 நீரில் கரையும் உரத்தை ஒரு லிட்டர் நீருக்கு 3 கிராம் (சிறிய டீ ஸ்பூன் அளவு) என்ற அளவில் கலந்து நாற்றுவிட்ட 12 மற்றும் 20-ம் நாள்களில் நாற்றுகளின் மேல் தெளிப்பு செய்து வாளிப்பான நாற்றுக்களாக பராமரிக்கலாம்.

நாற்றுக்களை மழையிலிருந்து பாதுகாக்க, சிறுவலைக் கூடாரங்களை அமைத்து அவைகளின் மேல் பாலித்தீன் மூடாக்கு அமைத்து பராமரிக்கலாம். நடவுக்கு முன்பாக நிழல் மற்றும் நீர்ப்பாசன அளவை குறைத்து நாற்றுக்களை நடவுக்கு தயார் செய்ய வேண்டும்.

விதைகள் முளைத்த 7, 10 நாள்களில் இமிடாகுளோபிரிட் மருந்து லிட்டருக்கு 0.2 மி.லி. வீதம் நீரில் கலந்து தெளிக்கவும். பின்னர் நடவுக்கு முன்பாக மீண்டும் ஒருமுறை தெளித்தும் பூச்சிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளலாம். இந்த முறையை பயன்படுத்தி விவசாயிகள் அதிக பயன்பெறலாம் என்றார் வீராசாமி.

**"கொத்தமல்லியிலும் கொழிக்கும் லாபம்'**

First Published : 10 Feb 2011 04:08:17 AM IST



பயிரிடப்பட்டுள்ள கொத்தமல்லித் தோட்டம்.

திருவள்ளூர்: கொத்தமல்லி இல்லாமல் சமையல் இல்லை என்ற நிலையில் விவசாயிகளுக்கு நல்ல லாபத்தை ஈட்டித் தருவதற்கும், சிறந்த மருத்துவ குணமுள்ள பயிராகவும் உள்ள கொத்தமல்லியை சாகுபடி செய்து விவசாயிகள் பயன்

பெறலாம்.

மக்களின் அன்றாட சமையல் தேவையில் முக்கிய பங்கு வகிப்பது கொத்தமல்லி. சில மாதங்களாக மார்க்கெட்டில் கொத்தமல்லிக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது. 400 கிராம் எடை கொண்ட ஒரு கொத்தமல்லி கட்டு ரூ. 15 முதல் ரூ.60 வரை நாளுக்கு ஒரு விலை விற்கிறது. விவசாயிகள் முறையாக கொத்தமல்லி சாகுபடி செய்தால் அதிக லாபம் கொழிக்கலாம்.

கொத்தமல்லி எல்லா பருவத்துக்கும் ஏற்ற சாகுபடி தன்மை கொண்டது. தாமதமாக பூத்து அதிக மகசூலை தரக்கூடியது. செடியின் அடி பாகத்தில் இருந்து அதிக அளவு தூர் வெடிக்கும் தன்மை கொண்டது. அதிக கிளைகளை கொண்டிருப்பதால் பூப்பதற்கு முன்னதாகவே அறுவடைக்கும் ஏற்றதாக உள்ளது. செடிகள் பூத்த பின்னும் பக்கக் கிளைகளில் உள்ள இலைகள் சமையலுக்கு பயன்படுகிறது.

ஒரே முறையாக ஏக்கர் கணக்கில் பயிரிடாமல் 20 முதல் 25 சென்ட் வரை பிரித்து 15 தினங்களுக்கு ஒரு முறை விதைத்தால் ஆண்டுதோறும் அறுவடை செய்து லாபம் ஈட்ட முடியும். விதைத்த 30 முதல் 40 நாளில் அறுவடைக்கு தயாராவதால் குறுகிய கால பணப் பயிராகவும் கொத்தமல்லி கருதப்படுகிறது.

பருவம்: மருத்துவ குணத்துக்காக பயிரிட்டால் ஜூன், ஜூலை, அக்டோபர், நவம்பர் மாதங்கள் ஏற்றதாகும்.

சமையல் தேவைக்காக பயிரிடுவதென்றால் ஆண்டு முழுவதும் பயிரிடலாம். மானாவாரி பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு 20 முதல் 25 கிலோ விதைகள் விதைக்க வேண்டும்.

மண் வகை: மணல் சார்ந்த செம்மண், வண்டல் மண் உகந்ததாகும்.

விதைப்பு: பொதுவாக விதை தூவி சாகுபடி செய்யலாம். இருப்பினும் மேட்டுக்கால் பாத்தி அமைத்து 20 செ.மீ. ஷ் 15 செ.மீ. இடைவெளி விட்டு அந்த இடைவெளியில் உடைக்கப்பட்ட விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த 8 முதல் 15 தினங்களில் முளைக்கத் தொடங்கும்.

விதை நேர்த்தி: மானாவாரி பயிருக்கு பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் என்னும் வேதிப்பொருளை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற அளவில் கரைத்து விதையை 16 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

பாஸ்போ பேக்டீரியா மற்றும் அசோஸ்பைரில்லம் என்ற உயிர் உரங்கள் 600 கிராம் என்ற அளவில் ஒரு ஹெக்டேருக்கான விதைகளுக்கு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

உரமிடுதல் (அடி உரம்): தொழு உரம் ஒரு ஹெக்டேருக்கு 10 மெட்ரிக் டன், தழைச்சத்து 10 கிலோ, மணிச்சத்து 40 கிலோ, சாம்பல் சத்து 20 கிலோ இட வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு யூரியா 22 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 250 கிலோ, பொட்டாஷ் 33 கிலோ இடவேண்டும்.

மேலுரம்: 10 கிலோ தழைச்சத்து மற்றும் 22 கிலோ யூரியா விதைத்த 30 நாளில் இட வேண்டும்.

நீர்ப்பாசனம்: விதைத்த உடன் 1 முறை, விதைத்து 3 நாளில் ஒரு முறை அதை தொடர்ந்து 7 முதல் 10 நாள்கள் வரை நீர்பாசனம் செய்ய வேண்டும்.

களைக்கொல்லி இடுதல்: ப்ளூகுளோரிலின் 700 மில்லி லிட்டர் அளவை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து இட வேண்டும். விதைத்த 30 நாளில் ஒரு குத்துக்கு 2 செடிகளை விட்டு விட்டு மீதமுள்ள செடிகளை பிடுங்க வேண்டும்.

இதுபோன்ற முறைப்படி, விவசாயிகள் கொத்தமல்லி சாகுபடி செய்தால் அதிக லாபம் பெற முடியும். இது குறித்த மேலும் விவரங்களுக்கு உதவி தோட்டக் கலை அலுவலர் பாபுவை 9444227095 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம். பயிரிடப்பட்டுள்ள கொத்தமல்லித் தோட்டம்.

**இயற்கை வேளாண்மை உழவர் விழா**

First Published : 10 Feb 2011 09:10:14 AM IST

புதுச்சேரி, பிப். 9: புதுச்சேரி வேளாண் அறிவியல் நிலையம் இயற்கை வேளாண்மை உழவர் விழாவை நடத்தி வருவதாக இந்த நிலையத்தின் முதல்வர் அ. ராமமூர்த்தி கூறியுள்ளார்.

÷அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷இன்றைய சூழ்நிலையில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் தடுக்கவும் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டை குறைக்கவும் உத்தேசித்து மத்திய அரசு இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும்

வகையில் தேசிய அளவில் ஒரு திட்டம் வகுத்து அதை பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் செயல்படுத்தப்பட்டது.

÷வேளாண் அறிவியல் நிலையத்தில் மாதிரி இயற்கை பண்ணை 5 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் அலுவலர்களுக்கும் விவசாயிகளுக்கும் இயற்கை முறையில் பயிர் சாகுபடி செய்முறை பயிற்சி தரப்படுகிறது. தொடர்ந்து 25 விவசாயிகள் வயலில் இயற்கை முறை சாகுபடிக்கு விளக்க வயல்கள் அமைத்துள்ளனர். அதைத தொடர்ந்து வேளாண் அறிவியல் நிலையம் புதுச்சேரியில் உள்ள 25 கிராமங்களில் இயற்கை முறை வேளாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறும் வகையில் உழவர் விழாக்களை திங்கள்கிழமை தொடங்கியது. இந்த விழா மார்ச் 11-ம் தேதி வரை நடைபெறும். அப்போது பூச்சிக் கொல்லிகளால் மண், நீர் மற்றும் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்பையும், செயற்கை உரங்களால் நிலங்களில் ஏற்படும் பாதிப்பையும் செயற்கை உரங்களால் நிலங்களில் ஏற்படும் உயிர்ச்சத்து குறைகளை எடுத்துக் கூறும் வகையில் கருத்துக் காட்சி நடைபெறுகிறது.

÷இயற்கை முறை வேளாண்மை, புதிய வகையான அங்கக உரங்களின் பயன்பாட்டு முறைகளை வேளாண் அலுவலர்கள் விளக்கிக் கூறுவார்கள். உயிர் உரங்கள், பூஞ்சான பூச்சிக்கொல்லிகளின் அறிமுகம், விற்பனையும் நடைபெறும்.

**ஏற்றுமதிக்கு தடை: அரிசி விலை குறைகிறது**

த. தேவராஜ்

First Published : 10 Feb 2011 04:28:45 AM IST

கடலூர், பிப். 9: கடலூர் மாவட்டத்தில் அரிசி விலை குறையத் தொடங்கி உள்ளது.

தமிழகத்தில் ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு இருந்தன. தற்போது சம்பா நெல் அறுவடை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. நெல் கொள்முதல் விலை முந்தைய ஆண்டுகளைவிட பெருமளவுக்கு வீழ்ச்சி அடைந்து உள்ளது, விவசாயிகளைக் கவலையில் ஆழ்த்தி வருகிறது.

தமிழகத்தில் சம்பா பருவத்தில், பொன்னி, வெள்ளைப் பொன்னி, குள்ளப் பொன்னி, பிபிடி, ஏடிடி 38 உள்ளிட்ட சன்னரக நெல் பெருவாரியாக பயிரிடப்படுகிறது. ஆனாலும் நகரப்புறங்களில் இந்த சன்னரக அரிசி ரகங்களைப் பெரும்பாலும் சாப்பாட்டுக்குப் பயன்படுத்துவது இல்லை. கர்நாடகா பொன்னி புழுங்கல், ஆந்திரா பொன்னி பச்சரிசி ரகங்களே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு மாதத்துக்கு முன் கர்நாடகா பொன்னி விலை தமிழகத்தில் கிலோ ரூ. 30 முதல் ரூ. 38 வரை விற்பனை செய்யப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் கர்நாடகா பொன்னி கிலோ ரூ. 30 முதல் ரூ. 32 வரை விறபனை செய்யப்பட்டு வந்தது.

ஆண்டுதோறும் பொதுவாக ஜனவரி மாதத்தில் அறுவடைக்குப்பின் அரிசி விலை குறையும் வாய்ப்பு உண்டு. ஆனால் இந்த ஆண்டு நெல் விலை பெருமளவு குறைந்த போதிலும், கடந்த 10 நாளுக்கு முன்பு வரை அரிசி விலை குறையாமல் இருந்து வந்தது.

ஆனால் தற்போது அரிசி விலை கொஞ்சம் குறையத் தொடங்கி இருக்கிறது. கடலூர் மாவட்டத்தில் ஒரு மாதத்துக்கு முன், கர்நாடகா பொன்னி விலை கிலோ ரூ. 30 ஆக இருந்தது. தற்போது ரூ. 26 ஆகக் குறைந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

மேலும் அதிசயப் பொன்னி கிலோ ரூ. 26 ஆக இருந்தது ரூ. 22 ஆகவும், பிபிடி பொன்னி கிலோ ரூ. 28 ஆக இருந்தது ரூ. 23 ஆகவும், பொன்மணி கிலோ ரூ. 22 ஆக இருந்தது ரூ. 20 ஆகவும் குறைந்து இருப்பதாகவும் அரிசி வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள்.

காரணம் என்ன? அரிசி ஏற்றுமதிக்கு அரசு தடை விதித்து இருப்பதால் கர்நாடகம், ஆந்திரம் மாநிலங்களில் இருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி குறைந்துவிட்டதால், தமிழகத்தில் அரிசி விலை குறைந்து வருவதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர். ஆந்திராவில் அரிசி ஆலைகள் மிக நவீன முறையில் அரிசி அரவை செய்கின்றன. நல்ல வெண்மையாகவும், உடைசல் இல்லாமலும் அங்குள்ள ஆலைகள் உற்பத்தி செய்கின்றன.

ஆனால் தமிழகத்தில் அரிசி ஆலைகள் அந்த அளவுக்கு இன்னமும் நவீனமாகவில்லை. மேலும் நெல் அரவைக்குப் பயன்படுத்தும் தண்ணீரைப் பொறுத்தும் அரிசியின் நிறம் மாறி விடுகிறது.

இதனால்தான் கர்நாடகா பொன்னியை தமிழகத்து நகர்ப்புற மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆந்திரம், கர்நாடகம் மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு நாளொன்றுக்கு, 200 லாரிகள் கர்நாடகா பொன்னி புழுங்கல் மற்றும் ஆந்திரா பொன்னி பச்சை அரிசி இறக்குமதி செய்யப்படுவதாகவும், கடலூர் மாவட்டத்துக்கு நாளொன்றுக்கு 10 டன் அரிசி வருவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள்.

**மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ.1500 ஆக நிர்ணயிக்க வலியுறுத்தல்**

First Published : 09 Feb 2011 11:34:07 AM IST

காரியாபட்டி, பிப். 8: மக்காச்சோளம் குவிண்டாலுக்கு 1,500 ரூபாயாக நிர்ணயம் செய்ய விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

காரியாபட்டியில் அக்டோபரில் பெய்த மழையால் அழகியநல்லூர், பேராலி, வரலொட்டி உள்பட சுற்றுப் பகுதிகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் விவசாயிகள் மக்காசோளம் பயிரிட்டனர். தற்போது அறுவடை செய்யப்படும் மக்காச்சோளத்தை குவிண்டாலுக்கு ரூ.800 வரை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாய சங்கத் தலைவர் ராமநாதன் கூறியதாவது:

விதை, மருந்து, உரங்கள் ஆகியவற்றின் விலையும், கூலியும் கடுமையாக உயர்ந்துள்ளது. மக்காச்சோளம் பெரும்பாலும் கோழித்தீவனமாக பயன்பட்டு வருகிறது. தற்போது முட்டை விலை கடுமையாக உயர்ந்தும், மக்காசோளத்தின் விலை மட்டும் அதிகரிக்கவில்லை.

மேலும் அறுவடை காலங்களில் மக்காசோளம் ஏற்றுமதியை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது. விவசாயிகளுக்கு மக்காச் சோளத்திற்கு நியாயமான விலை கிடைக்க குவிண்டாலுக்கு, 1,500 ரூபாயாக நிர்ணயம் செய்ய வேண்டும். அப்போதுதான் நஷ்டத்தில் இருந்து தப்பமுடியும் என்றார்.

**விவசாயப் பணிகளை இயந்திரமயமாக்கல் தவிர்க்க முடியாதது: வேளாண் துறைச் செயலர்**

First Published : 09 Feb 2011 09:54:23 AM IST

கோவை, பிப். 1: உணவு உற்பத்திக்கும் தேவைக்கும் உள்ள இடைவெளியைப் போக்க விவசாயப் பணிகளை இயந்திரமயமாக்குவது அவசியமானது என்று, வேளாண் துறைச் செயலர் பி.ராம மோகன்ராவ் தெரிவித்தார்.

÷வேளாண் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற, நெல் நாற்று நடவு இயந்திர உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் அவர் பேசியது:

÷வேளாண்மையைக் கைவிட்டு நகரங்களுக்கு குடிபெயரும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மாற்று வேலைவாய்ப்புகள் அதிகரித்துவிட்டதால், கிராமங்களில் பண்ணைஆட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேநேரம், பெருகிவரும் மக்கள்தொகையின் தேவையைப் பூர்த்தி செய்ய உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியம். தேவைக்கும் உற்பத்திக்குமான இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கு விவசாயத்தை இயந்திரமயமாக்கலே தீர்வாக இருக்கும்.

÷ஆகவே, விவசாயிகளின் மனநிலையை அறிந்து அவர்களுக்கு ஏற்ற எளிமையாகக் கையாளக் கூடிய பண்ணை இயந்திரங்களை, இயந்திர உற்பத்தியாளர்கள் வடிவமைக்க வேண்டும். நெல், காய்கறி, பழங்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் தேவை குறித்து இயந்திர உற்பத்தியாளர்கள் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமாகவே பண்ணை இயந்திரமயமாக்கலுக்கு விவசாயிகள் தயாராகிக் கொள்வர்.

÷இதை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, பண்ணை இயந்திரமயமாக்கலுக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இயந்திரங்கள் வாங்குவதற்கு ஏராளமான மானியம் அளிக்கப்படுகிறது.

÷ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையால் விளைச்சல் அதிகரித்துள்ளது. ஆனால், விவசாயிகள் அதைத் தொடர்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். இயந்திரமயமாக்கல் அதிகரித்துவிட்ட சூழலில், அதை நிலையாக இருக்கச் செய்வதில் இயந்திர உற்பத்தியாளர்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது என்றார். வேளாண் துறை ஆணையர் அதுல் ஆனந்த், தோட்டக்கலைத் துறை இயக்குநர் பி.சந்திரமோகன், வேளாண் பல்கலை. துணைவேந்தர் பி.முருகேச பூபதி,

வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் எஸ்.சந்தானபோஸ், பல்வேறு வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனங்களின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

**கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்றோரிடம் மட்டுமே நெல் கொள்முதல்: விவசாயிகள் புகார்**
First Published : 09 Feb 2011 09:06:02 AM IST

காரைக்கால், பிப். 8: காரைக்கால் மைய கூட்டுறவு விநியோக சங்கத்தில் (மார்க்கெட்டிங் சொசைட்டி) கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்கியவர்களிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

÷காரைக்கால் மாவட்டத்தில் மத்திய உணவுக் கழகம் (எப்.சி.ஐ.) மற்றும் காரைக்கால் மைய கூட்டுறவு விற்பனை விநியோக சங்கம் (மார்க்கெட்டிங் சொசைட்டி) ஆகியவை விவசாயிகளிடம் கடந்த ஆண்டு வரை நெல் கொள்முதல் செய்து வந்தன.

÷நிகழாண்டு எப்.சி.ஐ. சார்பில் இதுவரை நெல் கொள்முதல் தொடங்கப்படவில்லை. மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு கொள்முதல் செய்ய போதுமான நிதியின்மையால் கொள்முதல் தாமதமாக தொடங்கும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிள்ளது.

÷இதன்படி, இரு நாள்களாக திருநள்ளாறு பகுதி தென்னங்குடியில் மார்க்கெட்டிங் சொசைட்டி சார்பில் நெல் கொள்முதல் தொடங்கப்பட்டது. ஆனால், கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கிய விவசாயிகளிடம் மட்டுமே இந்த கொள்முதல் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

÷இதுகுறித்து திருநள்ளாறைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது: தண்ணீர் வரத்தில் தாமதம், இடுபொருள்கள் அரசின் சார்பில் காலத்தோடு வழங்காதது, மழை, வெள்ளத்தில் பயிர் பாதிப்பு என்ற கஷ்டங்களை கடந்து பயிர் அறுவடை செய்துள்ளோம். ஆனால், கூட்டுறவு சங்கமோ எல்லா தரப்பு விவசாயிகளிடமும் நெல் கொள்முதல் செய்யாமல், கடன் வாங்கியோரிடம் மட்டுமே கொள்முதல் செய்கிறது.÷இதனால், தனியார் வியாபாரிகளிடமும், தமிழகப் பகுதிக்கும் வாகன செலவு, தூக்குக் கூலி உள்ளிட்ட பல்வேறு செலவுகளை சுமந்து குறைந்த விலைக்கு நெல் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

÷இதுகுறித்து மார்க்கெட்டிங் சொசைட்டி தலைவர் எஸ். ஆசைத்தம்பி கூறியது: கொள்முதலுக்கு அரசிடம் தனியாக நிதி கோரப்பட்டது. இதனால், கொள்முதலில் தாமதம் ஏற்பட்டது. எங்களது கோரிக்கை நிறைவேறாத நிலையில், கூட்டுறவு சங்கங்களிடம் கடன் வாங்கியோரிடம் மட்டும் நெல் கொள்முதலை செய்கிறோம். பிற விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்ய நிதி இல்லை என்றார்.

÷அரசு தரப்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும், அறுவடை தொடர்ந்து நடந்து வருவதால், இப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்றோரிடம் மட்டுமே நெல் கொள்முதல்: விவசாயிகள் புகார்**

First Published : 09 Feb 2011 09:06:02 AM IST

காரைக்கால், பிப். 8: காரைக்கால் மைய கூட்டுறவு விநியோக சங்கத்தில் (மார்க்கெட்டிங் சொசைட்டி) கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்கியவர்களிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

÷காரைக்கால் மாவட்டத்தில் மத்திய உணவுக் கழகம் (எப்.சி.ஐ.) மற்றும் காரைக்கால் மைய கூட்டுறவு விற்பனை விநியோக சங்கம் (மார்க்கெட்டிங் சொசைட்டி) ஆகியவை விவசாயிகளிடம் கடந்த ஆண்டு வரை நெல் கொள்முதல் செய்து வந்தன.

÷நிகழாண்டு எப்.சி.ஐ. சார்பில் இதுவரை நெல் கொள்முதல் தொடங்கப்படவில்லை. மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு கொள்முதல் செய்ய போதுமான நிதியின்மையால் கொள்முதல் தாமதமாக தொடங்கும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிள்ளது.

÷இதன்படி, இரு நாள்களாக திருநள்ளாறு பகுதி தென்னங்குடியில் மார்க்கெட்டிங் சொசைட்டி சார்பில் நெல் கொள்முதல் தொடங்கப்பட்டது. ஆனால், கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கிய விவசாயிகளிடம் மட்டுமே இந்த கொள்முதல் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

÷இதுகுறித்து திருநள்ளாறைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது: தண்ணீர் வரத்தில் தாமதம், இடுபொருள்கள் அரசின் சார்பில் காலத்தோடு வழங்காதது, மழை, வெள்ளத்தில் பயிர் பாதிப்பு என்ற கஷ்டங்களை கடந்து பயிர் அறுவடை செய்துள்ளோம். ஆனால், கூட்டுறவு சங்கமோ எல்லா தரப்பு விவசாயிகளிடமும் நெல் கொள்முதல் செய்யாமல், கடன் வாங்கியோரிடம் மட்டுமே கொள்முதல் செய்கிறது.÷இதனால், தனியார் வியாபாரிகளிடமும், தமிழகப் பகுதிக்கும் வாகன செலவு, தூக்குக் கூலி உள்ளிட்ட பல்வேறு செலவுகளை சுமந்து குறைந்த விலைக்கு நெல் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

÷இதுகுறித்து மார்க்கெட்டிங் சொசைட்டி தலைவர் எஸ். ஆசைத்தம்பி கூறியது: கொள்முதலுக்கு அரசிடம் தனியாக நிதி கோரப்பட்டது. இதனால், கொள்முதலில் தாமதம் ஏற்பட்டது. எங்களது கோரிக்கை நிறைவேறாத நிலையில், கூட்டுறவு சங்கங்களிடம் கடன் வாங்கியோரிடம் மட்டும் நெல் கொள்முதலை செய்கிறோம். பிற விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்ய நிதி இல்லை என்றார்.

÷அரசு தரப்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும், அறுவடை தொடர்ந்து நடந்து வருவதால், இப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**கறவை மாடுகளுடன் பால் உற்பத்தியாளர்கள் மறியல்**

First Published : 09 Feb 2011 12:33:04 PM IST

பெரம்பலூர், பிப். 8: கொள்முதல் செய்யும் பாலுக்கு கூடுதல் விலை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, பெரம்பலூர் அருகே பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகளுடன் செவ்வாய்க்கிழமை மறியலில் ஈடுபட்டனர்.

மாட்டு தீவனத்தின் விலை உயர்வால் பால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. எனவே, தற்போதுள்ள விலையில் பசும்பாலுக்கு ரூ. 5-ம், எருமை பாலுக்கு ரூ. 8-ம் விலையை உயர்த்தி, அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி, பெரம்பலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் திங்கள்கிழமை முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரண்டாம் நாளான செவ்வாய்க்கிழமை, ரங்கநாதபுரம் கிராமத்தை சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் தங்களது கறவை மாடுகளுடன் பெரம்பலூர்- செட்டிகுளம் சாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பெரம்பலூர் வட்டாட்சியர் கு. கார்த்திகேயன், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முயன்றபோது, அவரை முற்றுகையிட்ட பால் உற்பத்தியாளர்கள், பால் விலையை உயர்த்த வேண்டும் என கோஷம் எழுப்பினர். மேலும், அந்தப் பகுதியில் உள்ள கழிவு நீர் கால்வாயில் பாலை ஊற்றினர். மறியலால் அந்தப் பகுதியில் ஒருமணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**கறவை மாடுகளுடன் பால் உற்பத்தியாளர்கள் மறியல்**

First Published : 09 Feb 2011 12:33:04 PM IST

பெரம்பலூர், பிப். 8: கொள்முதல் செய்யும் பாலுக்கு கூடுதல் விலை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, பெரம்பலூர் அருகே பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகளுடன் செவ்வாய்க்கிழமை மறியலில் ஈடுபட்டனர்.

மாட்டு தீவனத்தின் விலை உயர்வால் பால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. எனவே, தற்போதுள்ள விலையில் பசும்பாலுக்கு ரூ. 5-ம், எருமை பாலுக்கு ரூ. 8-ம் விலையை உயர்த்தி, அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி, பெரம்பலூர் மாவட்டத்தில் பால்

உற்பத்தியாளர்கள் திங்கள்கிழமை முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரண்டாம் நாளான செவ்வாய்க்கிழமை, ரங்கநாதபுரம் கிராமத்தை சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் தங்களது கறவை மாடுகளுடன் பெரம்பலூர்- செட்டிகுளம் சாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பெரம்பலூர் வட்டாட்சியர் கு. கார்த்திகேயன், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முயன்றபோது, அவரை முற்றுகையிட்ட பால் உற்பத்தியாளர்கள், பால் விலையை உயர்த்த வேண்டும் என கோஷம் எழுப்பினர். மேலும், அந்தப் பகுதியில் உள்ள கழிவு நீர் கால்வாயில் பாலை ஊற்றினர். மறியலால் அந்தப் பகுதியில் ஒருமணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி போராட்டம்**

First Published : 09 Feb 2011 02:14:57 PM IST

கோவில்பட்டி, பிப். 8: மழையால் பாதித்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் சார்பில் போராட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விவசாயிகளுக்கு வழங்கும் நிவாரணக் கூப்பனை அந்தந்த கிராமங்களிலேயே வழங்க வேண்டும். கூட்டுறவு சங்கம் மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்களில் பயனாளிகளின் பட்டியலை பார்வைக்கு வைக்க வேண்டும். 2008 முதல் 2011 வரை பயிர்க் காப்பீடு செய்தோருக்கு நஷ்டஈடு உடனே வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இப் போராட்டம் நடைபெற்றது. முன்னாள் எம்எல்ஏ அய்யலுசாமி தலைமை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் மோகன்ராஜ், மாவட்ட உதவிச் செயலர் அழகுமுத்துப்பாண்டியன், நகரச் செயலர் பரமராஜ், வட்டாரச் செயலர் சேதுராமலிங்கம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலர் பாலமுருகன், விவசாயிகள் சங்க வட்டாரச் செயலர் லெனின்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பின்னர், போராட்டக் குழு சார்பில் கோட்டாட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. பயிர்க் காப்பீட்டு நஷ்டஈடு இன்னும் ஒரு வாரத்தில் வழங்கப்படும் என்று அவர் கூறியதையடுத்து முற்றுகை விலக்கிக்கொள்ளப்பட்டது.

**வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் துவக்கம்**

First Published : 09 Feb 2011 09:58:46 AM IST

கூடலூர், பிப். 8: தோட்டக்கலைத் துறை சார்பில் கூடலூர் பகுதி விவசாயிகளுக்கான வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை துவங்கியது.

தோட்டக்கலைத் துறை, தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, நவீனத் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் செயல்விளக்கம் அளிக்கப்படுகிறது.

கூடலூர் வட்டார விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், ராக் கார்டன் அரங்கில் செவ்வாய்க்கிழமை துவங்கியது. தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தமிழ்மணி, முகாமைத் துவக்கி வைத்தார்.

வாழை பயிரிடுதல் மேலாண்மை தொடர்பாக உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் வி.பி.வசந்தா, மண் மாதிரி தொடர்பாக அஜி, வேளாண் விற்பனை தொடர்பாக வேளாண் அலுவலர் ரமேஷ், மலைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் தொடர்பாக பழனிசாமி ஆகியோர் பேசினர்.

வரும் 12-ம் தேதி வரை நடைபெறும் இந்த முகாமில், பயிர் சாகுபடி, பாதுகாப்பு, சந்தைப்படுத்தல், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் குறித்து விளக்கப்படுகிறது.

**மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ.1500 ஆக நிர்ணயிக்க வலியுறுத்தல்**

First Published : 09 Feb 2011 11:34:07 AM IST

காரியாபட்டி, பிப். 8: மக்காச்சோளம் குவிண்டாலுக்கு 1,500 ரூபாயாக நிர்ணயம் செய்ய விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

காரியாபட்டியில் அக்டோபரில் பெய்த மழையால் அழகியநல்லூர், பேராலி, வரலொட்டி உள்பட சுற்றுப் பகுதிகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் விவசாயிகள் மக்காசோளம் பயிரிட்டனர். தற்போது அறுவடை செய்யப்படும் மக்காச்சோளத்தை குவிண்டாலுக்கு ரூ.800 வரை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாய சங்கத் தலைவர் ராமநாதன் கூறியதாவது:

விதை, மருந்து, உரங்கள் ஆகியவற்றின் விலையும், கூலியும் கடுமையாக உயர்ந்துள்ளது. மக்காச்சோளம் பெரும்பாலும் கோழித்தீவனமாக பயன்பட்டு வருகிறது. தற்போது முட்டை விலை கடுமையாக உயர்ந்தும், மக்காசோளத்தின் விலை மட்டும் அதிகரிக்கவில்லை.

மேலும் அறுவடை காலங்களில் மக்காசோளம் ஏற்றுமதியை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது. விவசாயிகளுக்கு மக்காச் சோளத்திற்கு நியாயமான விலை கிடைக்க குவிண்டாலுக்கு, 1,500 ரூபாயாக நிர்ணயம் செய்ய வேண்டும். அப்போதுதான் நஷ்டத்தில் இருந்து தப்பமுடியும் என்றார்.

தினமலர்

**பால் குளிர்விப்பு நிலையங்களில் பால் வழங்க கலெக்டர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,01:08 IST

சேலம்: "கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஐந்து குளிர்விப்பு நிலையங்களில் பாலை வழங்கும்படி' கலெக்டர் சந்திரகுமார் கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் சித்திரைப்பட்டிபுதூர், பொட்டனேரி, தார்க்காடு, பெரியாக்கவுண்டனூர், குட்டப்பட்டிபுதூர் ஆகிய ஐந்து குளிர்விப்பு நிலையங்களில் ஒன்றிய பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்களில் பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு, அவர்கள் வழங்கும் பாலின் அளவு, தரத்தின் அடிப்படையில் பால் வழங்கிய உடன் பணம் பெற்றுக் கொள்ள அனைத்து ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. அனைத்து பால் உற்பத்தியாளர்களும் இந்த அரிய வாய்ப்பை பயன் படுத்தி சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு (ஆவின்) பால் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதிக வருவாய்க்கு குட்டி ஆடுகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,01:06 IST

நங்கவள்ளி: கூடுதல் விலையை எதிர்பார்த்து, பால் குடி மறவாத ஆட்டுக் குட்டிகளை கூட விவசாயிகள் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். சமீபகாலமாக வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வளர்ப்பு குறைந்துள்ளதால், விலை அதிகரித்துள்ளது. மேட்டூர் தாலுகாவில், கொளத்தூரில் வெள்ளிக்கிழமை, மேச்சேரியில் புதன்கிழமை, நங்கவள்ளியில் ஞாயிற்றுகிழமை ஆட்டுச் சந்தை கூடுகிறது. வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள், சந்தைக்கு வந்து ஆடுகளை போட்டி போட்டு வாங்கிச் செல்கின்றனர். அதனால், பிறந்து ஐந்து நாட்களிலேயே தாயிடம் இருந்து குட்டிகளை பிரித்து விற்பனை செய்கின்றனர். நங்கவள்ளியில் நேற்று நடந்த சந்தையில், பால்குடி மறவாத குட்டி ஆடுகளை பெட்டியில் எடுத்து வந்து விற்பனை

செய்தனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது: ஆட்டு கிடாவை 3,000 முதல் 5,000 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்குகின்றனர். பெட்டை ஆடுகளை அந்த விலைக்கு வாங்குவதில்லை. பெட்டை ஆடுகளையும், குட்டிகளை சேர்த்து விற்றால் கூட 3,000க்கு வாங்குகின்றனர். அதனால், ஆடுகளை விற்பனை செய்யும் போது, கூடவே பெட்டை குட்டிகளை குறைந்த விலைக்கு கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. எனவே, பெட்டை குட்டிகளை தனியாக எடுத்து வந்து விற்கின்றனர். ஒரு குட்டியை 600 முதல் 800 ரூபாய்க்கு விவசாயிகள் வாங்கி செல்கின்றனர். அந்த குட்டிகளை வாங்கி செல்லும் விவசாயிகள், புட்டிபால் கொடுத்து குட்டிகளை வளர்க்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**பவானி வட்டாரத்தில் வாழையில் இலைப்புள்ளி நோய்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,01:14 IST

ஈரோடு:பவானி வட்டாரத்தில் 220 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள வாழை மரங்களில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது.பவானியை சுற்றியுள்ள பகுதியில் வாழை, கரும்பு, மஞ்சள் பயிர்கள் அதிகளவு பயிரிடப்படுகின்றன. நீரோட்டம் அதிகளவு உள்ளதால், இப்பகுதியில் வாழையை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பவானி வட்டாரத்தில் வைரமங்கலம், காலிங்கராயன் பாளையம், எலவமலை, பருவாச்சி உள்ளிட்ட கிராமங்களில் 220 ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, வாழை மரத்தில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.பவானி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் முனியாண்டி கூறியதாவது:பவானியில் வாழை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். கதளி ரகம் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது.சில விவசாயிகள் நேந்திரம், மோரிஸ் ரகங்களை பயிரிட்டுள்ளனர். வாழை இலைகள் திடீரென மஞ்சள் கலருக்கு மாறி வருவதால் விவசாயிகளுக்கு என்ன செய்வது என தெரியவில்லை. இது தொடர்பாக சில விவசாயிகள் புகார் கூறியுள்ளனர்.வாழை இலையை தாக்கும் "சிகடோகா' என்ற இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த முடியும். முதலில் இலைகளின் ஓரங்கள் மற்றும் நுனியில் மஞ்சள் நிறத்திலோ அல்லது பச்சை கலந்த மஞ்சள் நிறத்திலோ கோடுகள் காணப்படும். பின்பு, இந்த கோடுகள் கரும்பழுப்பு நிறத்தில் நீள் வட்டமாக மாறுகின்றன. இதை மட்டக்காய்ச்சல் நோய் என்றும் கூறுவர்.இலைப்புள்ளிகள் ஏற்பட்ட இலையை அறுத்து அப்புறப்படுத்தி, தீ வைத்து விட வேண்டும். போதுமான இடைவெளியில் வாழை மரங்களை நட வேண்டும். நல்ல வடிகால் வசதி செய்து தர வேண்டும். களையின்றி வயலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.கார்பன்டசீம் 0.1 சதவீதம் மற்றும் காலிக்ஸின் 0.1 சதவீதம் மருந்துகளை ஒட்டும் திரவத்துடன் (டீப்பால் ஒரு டேங்குக்கு 10 மில்லி என்ற அளவில்) கலந்தும் அல்லது புரோப்பிகோனஜோல் 0.1 சதவீதம்

மருந்தை இந்நோயின் அறிகுறி காணப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்கு ஒரு முறையாக ஐந்து முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**குளிரூட்டும் நிலையங்களில் பால் கொள்முதலுக்கு ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,01:13 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையங்களில் நேரடியாக பால் கொள்முதல் செய்யப்படுகிறது.
மாவட்ட கலெக்டர் சவுண்டையா அறிக்கை: ஈரோடு மாவட்டத்தில் சில பால் கொள்முதல் நிலையங்களில் ஊழியர்கள் இல்லாததால், பால் ஊற்றுவதில் சிரமம் ஏற்படுவதாக பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து புகார் வந்தது. ஈரோடு மாவட்டம் குழலிபாளையம், கந்தசாமி பாளையம், சடையப்பன்நகர், பெரமியம், அணைப்பாளையம், பொன்னிவாடி, நத்தக்காடையூர், புதுப்பை, பழையகோட்டை புதூர், கொளத்துப்பாளையம், ஓடாநிலை, மங்கலப்பட்டி ஆகிய 12 பால் குளிரூட்டும் நிலையங்களில் நேரடியாக பால் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனளர். பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலை, குளிரூட்டும் நிலையங்களில் ஊற்றி, உடன் தொகையை பெற்றுக் கொள்ளலாம்.

**மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,01:11 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் சென்ற மூன்று ஆண்டுகளாக மஞ்சள் விலை உயர்வடைந்தது. சென்ற ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் ஒரு குவிண்டால் மஞ்சள் 17 ஆயிரத்து 250 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பு ஆண்டு ஜனவரி 15ம் தேதிக்கு பிறகு புது மஞ்சள் வரத்து துவங்கியது. அதுமுதல், மஞ்சள் விலை படிப்படியாக குறையத் துவங்கியது. ஜனவரி மாத இறுதியில் ஒரு குவிண்டால் 15 ஆயிரத்து 500 ரூபாய், ஃபிப்ரவரி துவக்கத்தில் 13 ஆயிரத்து 100 ரூபாய் என குறைந்தது. நேற்று முன்தினம் விரலி ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 731 ரூபாய், கிழங்கு 11 ஆயிரத்து 714 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று விரலி மஞ்சள் 12 ஆயிரத்து 27 ரூபாய், கிழங்கு மஞ்சள் 10 ஆயிரத்து 367 ரூபாய்க்கு விற்பனையானது. சென்ற இரு மாதத்தில் விரலி 5,000 ரூபாய் வரையும், கிழங்கு மஞ்சள் குவிண்டாலுக்கு 7,000 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது. மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது: சென்ற மூன்று

ஆண்டுகளாக மஞ்சள் விலை தொடர்ந்து அதிகரித்து. நடப்பு ஆண்டு ஏற்றுமதி நல்ல நிலையில் உள்ளது. மஞ்சள் வரத்து தொடர்ந்து அதிகரித்து காணப்படுகிறது. மஞ்சள் வரத்து அதிகரிப்பு காரணமாக மஞ்சள் விலை வீழ்ச்சி அடைகிறது. இன்னும் ஓரிரு மாதம் கழித்து மஞ்சள் விலை உயர வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**"பூ' வரத்து அதிகம் விலை மள..மள.. சரிவு : ரூ.400 விற்ற மல்லி, ஜாதிப்பூ ரூ.200, ரூ.150க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,02:04 IST

திருச்சி: பூ வரத்து அதிகரிக்கத்துவங்கியதால், பூ விலை மள.. மளவென சரிந்துவிட்டது. கடந்த வாரம் 400 ரூபாய்க்கு விற்கப்பட்ட மல்லி மற்றும் ஜாதி பூக்கள் 200, 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

திருச்சி பூ மார்க்கெட்டுக்கு ஸ்ரீரங்கம், புலியூர், கோசம்பட்டி, வயலூர், அல்லிதுறை, எட்டரைகோப்பு, மணப்பாறை, வையம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து பூக்கள் கொண்டு வரப்படுகிறது. கடந்த சில நாட்களாக பெய்த கடும் பனிப்பொழிவு காரணமாக பூ வரத்து குறைவாக இருந்தது. இதனால், மல்லி, ஜாதி போன்ற வாசனை பூக்கள் 400 ரூபாய்க்கும், கனகாம்பரம் 500 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. தற்போது, பனிப்பொழிவு குறைந்து, நல்ல வெயில் அடிக்கத் துவங்கியுள்ளது.

இதனால், செடிகளில் பூக்கள் பூத்துக்குலுங்க துவங்கியுள்ளது. ஸ்ரீரங்கம், காந்தி மார்கெட்டில் உள்ள பூ மார்க்கெட்டுக்கு அதிகளவு பூக்கள் வரத்துவங்கியுள்ளது. கடந்த வாரம் 400 ரூபாய்க்கு விற்கப்பட்ட மல்லி, ஜாதி பூக்கள் முறையே 200, 150 ரூபாய் என நேற்று விற்கப்பட்டது. மஞ்சள் கனகாம்பரம் 100 ரூபாய்க்கும், சிவப்பு கனகாம்பரம் 200 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. மல்லி பூ வரத்து குறையும் போது, காக்கரட்டான் எனப்படும் காட்டுமல்லி பூ தான் மல்லி இடத்தை சரி செய்யும். இதனால், காக்கரட்டான் பூவும் அதிக விலைக்கு விற்றது. தற்போது, மல்லி வரத்து அதிகரிக்கத் துவங்கியுள்ளதால் காக்கரட்டான் கிலோவுக்கு 80 ரூபாயாக குறைந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி பூக்களின் விலை நிலவரம் ஒரு கிலோவில் வருமாறு: மல்லி ரூ.200, ஜாதி ரூ.200, காக்கரட்டான் ரூ.80, மஞ்சள் கனகாம்பரம் ரூ.100, சிவப்பு கனகாம்பரம் ரூ.200, அரளி ரூ.30, செவ்வந்தி ரூ.50, கோழிக்கொண்டை ரூ.20, விச்சிப்பூ ரூ.60, ரோஸ் ரூ.20, சம்மங்கி ரூ.70 என விற்றது.

திருப்பதிக்கு திருச்சியிலிருந்து தான் அதிகளவு பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதில், விச்சிப்பூ அதிகளவு ஏற்றுமதியாகிறது. விச்சிப்பூவின் வரத்து அதிகரிக்கத் துவங்கியதால், அதிகளவு விச்சிப் பூ திருப்பதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பூக்களின் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது என பூ வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

**மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைக்க மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,02:00 IST

திருச்சி: திருச்சியில் மீன்வளத் துறை சார்பில் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணை அமைப்பதற்காக மானியத் தொகையாக இருவருக்கு தலா 1.5 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

கவுண்டம்பட்டியைச் சேர்ந்த பதிவரசுமணி, பூலாம்பட்டியைச்சேர்ந்த தேவதாஸ் ஆகியோர் தலா 1.5 லட்சம் ரூபாய்க்கான "செக்', தமிழக மீனவர் நலவாரியம் சார்பில் வாரிய உறுப்பினர் மகள் திருமண நிதியுதவியாக விரகாலூரைச் சேர்ந்த மதியழகனுக்கு 5,000 ரூபாய்க்கான "செக்' ஆகியவற்றை தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் நேரு வழங்கினார்.
திருச்சி கலெக்டர் மகேசன் காசிராஜன், மாநகராட்சி மேயர் சுஜாதா, எம்.எல்.ஏ.,க்கள் பெரியசாமி, துணை மேயர் அன்பழகன், கமிஷனர் பால்சாமி, மீன்வளத் துறை உதவி இயக்குநர் ஷர்மிளா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**விலை வீழ்ச்சியால் சூரியகாந்தி உற்பத்தி பாதிப்பு : பாதியாக குறைந்தது சாகுபடி பரப்பளவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2011,01:13 IST

கரூர்: கொள்முதல் விலை குறைந்ததால், சூரியகாந்தி பயிர் சாகுபடி பரப்பளவு கரூரில் பாதியாக குறைந்தது. இடைத்தரகர், "ஆன்-லைன்' வர்த்தகம் காரணமாக, விவசாயிகள் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.கடலை எண்ணெய், பாமாயில், தேங்காய் எண்ணெய் என பயன்படுத்திய நிலைமாறி, பெரும்பான்மை மக்கள் தற்போது சூரியகாந்தி எண்ணெய் பயன்படுத்த துவங்கியுள்ளனர். "கொழுப்பு' சத்து குறைவாக உள்ளதாக கூறப்படுவதால், இந்த எண்ணெய் அதிக வரவேற்பு பெற்றுள்ளது.

கரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் 2,200 ஹெக்டேர் முதல் 3,000 ஹெக்டேர் வரை பயிர் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த டிசம்பர் வரையிலான கணக்கெடுப்பு அடிப்படையில், மாவ ட்ட அளவில் 1,307 ஹெக்டேர் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது.

கரூரில் 24 ஹெக்டேர், தாந்தோணி 75, அரவக்குறிச்சி 221, க.பரமத்தி 110, குளித்தலை 165, தோகமலை 486, தரகம்பட்டி 36, கிருஷ்ணராயபுரம் 190 என மொத்தம் 1,307 ஹெக்டேர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்பட்டுள்ளது.
சூரியகாந்தி பயிர் ஏக்கருக்கு 600 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. அரசு வேளாண் துறை மூலம் நவீன ரகங்களாக, கே 1, கே 2, இ.சி.68415, பி.எஸ்.எச்.1, கோ 2, கோ 3, கோ 4 ஆகிய வகைகளும் பயன்பாட்டில் உள்ளன. தனியார் நிறுவனங்கள் ஒட்டு வகைகளாக புதிய ரகங்கள் டி.கே.3890, சன்மேக்ஸ், அருண், பயனீர் அட்வான்ஸ் மற்றும் காரிகில் ஆகிய இனங்களும் விற்பனையில் உள்ளன.

ஒட்டுவகையல்லாத சூரியகாந்தி விதையளவு ஏக்கருக்கு 6 கிலோ தேவைப்படுகிறது. ஒட்டுவகைகளோ 2 கிலோ மட்டு÷ ம போதுமானது. இவ்வாறு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரை செலவு செய்து, மூன்று மாதங்களில் 13 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு கிடைத்தது. நிலக்கடலை, உளுந்து ஆகியவற்றை ஒப்பிடுகையில் அதிக லா பம் கிடைக்கும் பயிராக சூரியகாந்தி இருந்ததால், விவசாயிகள் சூரியகாந்தியை நாடி சென்றனர்.

சூரியகாந்தி விவசாயிகள் கூறியதாவது: வெள்ளக்கோயில் மார்க்கெட் நிலவரப்படி கிலோ ஒன்றுக்கு 18 ரூபாய் வரையே கிடை க்கிறது. அதே சமயம், சூரியகாந் தி சமையல் எண்ணெய் விலை மட்டும் குறையவில்லை. விவசாயிகள் உழைப்பில் வரும் பயிரில் இருந்து 25 சதவீதம் பலன்தான் கிடைக்கிறது. மீதமுள்ள 75 சதவீதம் பலன், இடைத்தரகர்களுக்கே செல்கிறது. தற்போதுள்ள "ஆன்-லைன்' மார்க்கெட், சந்தைக்கு வரும் பொருளுக்கே சாதகமாக உள்ளது. மூலப்பொருளான சூரியகாந்தி விதைக்கு எந்த பலனும் அளிப்பதில்லை. இதனால், பல விவசாயிகளும் மாற்று பயிரை சாகுபடி செய்ய துவங்கிவிட்டனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

வழக்கம்போல் விவசாய உற்பத்தி பொருளுக்கு நிலையான விலை இல்லாததால், கரூர் மாவட்டத்தில் சாதனை படைத்த சூரியகாந்தி சாகுபடி தற்போது பாதியாக குறைந்துவிட்டது. இந்த மாற்றம் வேளாண்துறைக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,21:26 IST

கடலூர் : விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கடலூர் செம்மண்டலம் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் நாளை (11ம் தேதி) நடக்கிறது.

இது குறித்து வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் கடலூர் செம்மண்டலம் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் நாளை (11ம் தேதி) காலை 10.30 முதல் பகல் 1 மணி வரை நடக்கிறது. இதில் தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வணிகம், விதைச் சான்று, மின்சார வாரியம், கால்நடை பராமரிப்பு, பொதுப்பணித்துறை (நீர் பாசனம்) துறையை சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்கின்றனர். விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு இளங்கோவன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி கடைவீதியில் "ஸ்ட்ரா பெரி' பழம் விற்பனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,22:06 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சியில் பகுதியில் "ஸ்ட்ரா பெரி'பழங்கள் வியாபாரம் ஜரூராக நடந்தது.

வெளி நாடுகளில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் ஸ்ட்ரா பெரி பழத்திற்கும் மக்களிடையே அதிகளவில் மவுசு உண்டு. இந்த பழம் சிறியதாக பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் உள்ளதுடன், அதிக ருசியாக இருக்கும்.இந்த பழங்கள்
மகாராஷ்டிராவில் அதிகளவில் கொள் முதல் செய்யப்படுகிறது.

இதன் விலை அதிகமாக இருப்பதால் பெரும்பாலான பொதுமக்கள் இதனை வாங்குவதற்கு முன்வருதில்லை. பெரிய பெரிய நகர பகுதிகளில் உள்ள பழ கடைகளில் மட்டுமே ஸ்ட்ரா பெரி பழங்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படும்.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி பஸ் வீதியில் "ஸ்ட்ரா பெரி' கடந்த இரண்டு நாட்களாக பரபரப்பாக விற்பனை செய்யப்படுகிறது. இருபது பழங்கள் அடங்கிய ஒரு பெட்டி 50 ரூபாய் என விற்பனை செய்யப்பட்டது. பெரிய பழக் கடைகளில் மட்டுமே விற்பனை செய்யக்கூடிய ஸ்ட்ரா பெரி பழங்கள் நடைபாதை கடையில் விற்பனைக்கு வந்ததை பார்த்த பொதுமக்கள் பலர் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

**பயிர் பாதுகாப்பு: விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,22:53 IST

கோவை :"உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை இழப்பின்றி பாதுகாக்க, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிப்பது அவசியம்' என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு வானொலி வேளாண்மை பள்ளியின் துவக்க விழா வேளாண் பல்கலையில் நடந்தது. வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி தலைமை வகித்து பேசியதாவது: குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் காய்கறி பயிரிடலாம். 2025ம் ஆண்டில் காய்கறி தேவை 170 டன்னாக இருக்கும். ஆண்டுக்கு 1.4 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உணவுப் பயிர்கள் பூச்சி, பூஞ்சாணம், நூற்புழுக்களால் சேதமடைகின்றன. 12 முதல் 15 சதவீதம் வரை விவசாயிகள் ரசாயன பூச்சி மருந்து தெளிப்பதால் மக்களுக்கு கேடு விளைகிறது. விளைபொருட்களில் உள்ள ரசாயன நச்சுத் தன்மையை கண்டறிய மதுரை மற்றும் கிள்ளிகுளத்தில் உள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் பூச்சி கொல்லி ஆய்வகம் அமைய உள்ளது. பூச்சி மருந்துகளின் நஞ்சு இல்லாத காய்கறிகளை உற்பத்தி செய்ய வேண்டும். விவசாயிகள் பயிர்பாதுகாப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்.இவ்வாறு, துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.அமெரிக்கா நாட்டிலுள்ள "வெர்ஜீனியா டெக்' நிறுவனத்தின் துணைத் தலைவர் டட்டா பேசுகையில், ""மக்கள்தொகை உயர்வுக்கு ஏற்ப உற்பத்தியின் தேவை அதிரித்துள்ளது. உற்பத்தி பொருட்கள் வயல், சேமிப்பு கிடங்கு, பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் சேதமடைகின்றன. உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை இழப்பின்றி பாதுகாக்க ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிப்பது அவசியம்," என்றார்.விரிவாக்க கல்வி இயக்குனர் கலைச்செல்வன் பேசுகையில் ""வானொலி வேளாண் பள்ளியில் காய்கறி பயிர் பாதுகாப்பு பற்றி 19 பாடங்கள் இருக்கும், காய்கறி விவசாயிகள் இந்த படிப்பில் சேர முன் வர வேண்டும். ஒலிபரப்பை 18 மாவட்டங்கள் உள்ள விவசாயிகள் கேட்டு பயன்பெறலாம்,"என்றார். ஒருங்கிணைந்த பாதுகாப்பு திட்டம் இயக்குனர் முனியப்பன், வெர்ஜீனிய டெக் நிறுவன இயக்குனர் ஜோனத்தன், வேளாண் பல்கலை பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் சுவாமியப்பன், தாவர மூலக்கூறு உயிரியல் மைய இயக்குனர் சரவணன் உள்ளிட்டோர் பேசினர். பயிர் பாதுகாப்பு தலைவர் கஜேந்திரன், திருச்சி வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய தர்மலிங்கம் ஆகியோர் நன்றி கூறினர்.

6,200 டன் டி.ஏ.பி., உரம் ரெடி : வேளாண் அதிகாரி தகவல்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,23:16 IST

வெள்ளகோவில்: நெல் அறுவடை முடிந்து பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்க, முத்தூர் வேளாண் விரிவாக்க மையத்தில் 6,200 டன் டி.ஏ.பி., உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. வெள்ளகோவில் வட்டார பயறு சாகுபடி விவசாயிகள், அருகிலுள்ள வேளாண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.வெள்ளகோவில் வட்டாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் தற்போது நெல் அறுவடை நடந்து வருகிறது. அறுவடை முடிந்ததும், பயறு வகைகள் சாகுபடியில் ஆர்வம் காட்டுவர். பெரும்பாலான விவசாயிகள் முறையான அடி உரம் இடுவதில்லை. இதனால், மகசூல் குறைகிறது. பயறு சாகுபடி செய்த 30வது நாள் பருவம் மற்றும் 45வது நாளான பூக்கும் பருவத்தில், டி.ஏ.பி., உரத்தை நீரில் கலந்து தெளிப்பதால், நல்ல மகசூல் பெறலாம்.தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், பயறு விவசாயிகளுக்கு வழங்க, முத்தூர் வேளாண் அலுவலகத்தில் 6,200 டன் டி.ஏ.பி., இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேர் நிலத்தில் பயறு வகை பயிர் செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் 25 கிலோ டி.ஏ.பி., வழங்கப்படுகிறது.ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி.,யை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் மூலம் பயிர்களின் இலைகளின் நன்குபடும்படி அடிக்க வேண்டும். விதைத்த 30வது நாள் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிப்பதால், அமோனியம் சத்து பயிர்களுக்கு கிடைக்கிறது. இதனால், பூக்கள் உதிர்வது தடுக்கப்பட்டு, அனைத்து பூக்களும் பிஞ்சாக மாறும்; விவசாயிகள் அதிகளவு மகசூல் பெற முடியும்.டி.ஏ.பி., தெளிப்பதற்கு முன், விவசாயிகள் நிலங்களை ஈரப்பதமாக வைத்திருப்பது அவசியம். அதேபோல், மாலையில்தான், தெளிக்க வேண்டும். காலை 7.00 மணிமுதல் 11 மணி வரை பயறுகளில் கருவுருதல் நடைபெறும். அந்நேரங்களில் தெளித்தால், கருவுருதல் பாதிப்பு ஏற்படும். வெள்ளகோவில் வட்டாரங்களில் பயறு சாகுபடி செய்துள்ள விவசாயிகள், அருகிலுள்ள வேளாண் அலுவலகங்களை அணுகி, டி.ஏ.பி., பெற்றுக்கொள்ளலாம், என வெள்ளகோவில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

சூரியகாந்தி சாகுபடி பரப்பு குறைகிறது

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,23:14 IST

வெள்ளகோவில் :நோய் தாக்கம் அதிகரிப்பு, ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால், வெள்ளகோவிலில் சூரியகாந்தி பரப்பு மிகவும் குறைந்து விட்டது. கடந்த ஆண்டுகளில் 4,000 ஏக்கர் பரப்பளவு சாகுபடி செய்யப் பட்டிருந்த நிலையில், தற்போது வெள்ளகோவில் வட்டாரங்

களில் சூரியகாந்தியை பார்ப்பதே அரிதாகி வருகிறது.வெள்ளகோவிலில், மரவள்ளி கிழங்கு, மக்காச்சோளம், கரும்பு உள்ளிட்ட அனைத்து பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. விவசாயிகள், சூரியகாந்தி சாகுபடியை கைவிட்டு விட்டனர். இதற்கு ஆட்கள் பற்றாக்குறையும், நோய் தாக்கமுமே காரணம் என்று விவசாயிகள் சொன்னாலும், லாபம் கருதி சுழற்சி முறையை பின்பற்றாமல் தொடர்ந்து சூரியகாந்தி பயிரிட்டதால் மண் வளம் குறைந்து விட்டது; தற்போது எதிர்பார்த்த மகசூல் பெற முடிவதில்லை என்கிறது, வேளாண்துறை.விவசாயிகள் கூறியதாவது:வெள்ளகோவில் வட்டாரத் தில் கடந்த 2005-07 வரையிலான ஆண்டுகளில் சூரியகாந்தி அதிகளவு பயிர் செய்யப் பட்டிருந்தது. வெள்ளகோவில் பகுதிகளில் எங்கு பார்த்தாலும், சூரியகாந்தியை காண முடிந்தது. மற்ற பயிர்களை போல் இல்லாமல், தினமும் கவனித்து வந்தால் மட்டுமே சூரியகாந்தியில் மகசூல் அதிகம் பெற முடியும். விவசாய கூலித்தொழிலில் ஈடுபட்ட பலர், தற்போது 100 நாள் வேலைத்திட்டத்தில் பணியாற்ற ஆர்வம் காட்டுகின்றனர். இதனால், வெள்ளகோவிலில் விவசாயத்துக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை.நோய் தாக்கம், மகசூல் பாதிப்பு, விலை குறைவு போன்ற காரணங்களால் சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். சிறிது சிறிதாக சூரியகாந்தி சாகுபடி செய் வதை நிறுத்தி விட்டு, மரவள்ளி, மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டினர். தற்போது வெள்ளகோவிலில் சூரியகாந்தி சாகுபடி நிலமே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது, என்றனர்.வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:வெள்ளகோவில் பகுதிகளில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வரை 4,000 ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தி பயி ரிடப்பட்டிருந்தது. பெரும் பாலான விவசாயிகள், ஒட்டு ரகத்தை அதிகளவு சாகுபடி செய்திருந்தனர். ஆரம்பத்தில் பயிர் செய்தபோது, சூரியகாந்தியில் அதிகளவு மகசூல் பெற முடிந்த விவசாயிகளால், அடுத்தடுத்த காலகட்டத்தில் மகசூல் பெற முடியாத நிலை ஏற் பட்டது. மார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்ததால், சுழற்சி முறையில் விவசாயத்தை பின் பற்றாமல், தொடர்ந்து சூரியகாந்தி பயிரிட்டு வந்தனர் விவ சாயிகள். ஆண்டுக்கு இரண்டு மூன்று முறை தொடர்ந்து ஒரே பயிரை சாகுபடி செய்ததால், மண்ணில் உள்ள சத்துக்கள் உறிஞ்சப்பட்டு, ஆரம்பத்தில் இருந்த மகசூலை பெற முடியாத நிலை ஏற்பட்டது.ஒருங்கிணைந்த நோய் தடுப்பு முறையை கையாளாமல் விட்டு விட்டதால், நோய்களை கட்டுப் படுத்த முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. பயிர் செய்த 30வது நாளிலேயே செடிகள் வைரஸ் தாக்குதலால் கருக ஆரம்பித்து விட்டன. தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டதையடுத்து, சூரியகாந்தி பரப்பை விவசாயிகள் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது. சுழற்சி முறை விவசாயத்தை கடைபிடித்து, ஒருங் கிணைந்த விவசாயத்தை மேற் கொண்டால், சூரியகாந்தி விவசாயத்தில் நல்ல மகசூல் பெறலாம், என்றனர்.

**கால்நடை பாதுகாப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,23:26 IST

ஊட்டி :தமிழக முதல்வர் அறிவித்த சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் மேல்கவ்வட்டி கிராமத்தில் நடந்தது.கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல், சிகிச்சை அளித்தல், மலட்டு தன்மை நீக்க சிகிச்சை, சினை பரிசோதனை போன்றவையும் செயற்கை முறை கருவூட்டலும் நடந்தது.நஞ்சநாடு கால்நடை உதவி மருத்துவர் சுகுமாரன், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி மருத்துவர்கள் யுவராஜ், தாரணி, கால்நடை பராமரிப்பு துறை உதவியாளர் ஆகியோர் சிகிச்சை அளித்தனர். முகாமில் 68 பயனாளிகளின் 272 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பங்கேற்ற கால்நடைகளில் சிறந்த ஒரு பசுவுக்கும், ஒரு கிடாரிக்கும் கால்நடை பராமரிப்பு துறையால் வழங்கப்பட்டது.

**நெல் கொள்முதலில் முறைகேடு : ஒன்றிய கூட்டத்தில் புகார்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,23:10 IST

மானாமதுரை : நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வியாபாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது,' என, மானாமதுரை ஊராட்சி ஒன்றிய கூட்டத்தில், கவுன்சிலர்கள் தெரிவித்தனர். தலைவர் தங்கமணி தலைமையில் கூட்டம் நடந்தது. துணை தலைவர் சிங்காரம் முன்னிலை வகித்தார். பி.டி.ஓ., பரமசிவம் வரவேற்றார்.
பாலசுப்பிரமணியன் (மார்க்சிஸ்ட்): மேலநெட்டூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தியும் நடவடிக்கை இல்லை.
தலைவர்:கலெக்டர், நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளோம்.
பாக்கியம் (அ.தி.மு.க.,): சிப்காட்டில் இருக்கும் தனியார் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் துர்நாற்றம் ஏற்படுத்துகிறது. பள்ளிக்குழந்தைகள் அவதிப்படுகின்றனர்.
சண்முகநாதன் (தி.மு.க.,): நன்றாக விளைந்த நெல் பயிரில் பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.
சத்தியமூர்த்தி (காங்.,): இந்தாண்டு நெல் மகசூல் அதிகரித்துள்ளது. கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறக்க வேண்டும். கொள்முதல் நிலையங்களில் வியாபாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதால், விவசாயிகள் நீண்ட நேரம் காத்திருக்கின்றனர்.
தலைவர்: கொள்முதல் நிலையங்கள் அமைக்க நிறைய இடங்கள் உள்ளன. ஆனால் நெல்லை தூற்றும் இயந்திரங்கள் கிடைப்பது இல்லை. புதிதாக வாங்க அரசிடம் அனுமதி பெறவேண்டியிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு விவாதம் நடந்தது.

**மும்பை நெடுஞ்சாலையில் போக்குவரத்து ஸ்தம்பித்தது: வெங்காயம் விலை வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் மறியல் சாலையில் சென்ற வாகனங்களை வெங்காயம் வீசி தாக்கினர்**

நாசிக், பிப்.10–

வெங்காயம் விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால் ஆத்திரமடைந்த விவசாயிகள் மும்பை நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர். அப்போது சாலையில் சென்ற வாகனங்கள் மீது வெங்காயம் வீசி தாக்கினர்.

விலை வீழ்ச்சி

கடந்த சில வாரங்களுக்கு முன் வெங்காயத்தின் விலை நாடு முழுவதும் உச்சாணிக் கொம்பில் இருந்தது. ஒரு கிலோ வெங்காயம் 100 ரூபாய் வரை விற்கப்பட்டது. இதன் காரணமாக வெளிநாட்டு ஏற்றுமதிக்கு தடை விதித்த மத்திய அரசு, வெங்காயத்தின் விலையை குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் பயனாக வெங்காயத்தின் விலை படிப்படியாக குறையத் தொடங்கியது.நேற்று பிம்பல்கான் பசவந்த் மார்க்கெட்டில் ஒரு குவிண்டால் (100 கிலோ) வெங்காயம் 450 முதல் 500 ரூபாய் வரை விற்பனை ஆனது.

விவசாயிகள் போராட்டம்

இதனைக் கண்டு விவசாயிகள் கடும் ஆத்திரமடைந்தனர். அவர்கள் திடீர் போராட்டத்தில் குதித்தனர். மும்பை–ஆக்ரா தேசிய நெடுஞ்சாலையில் பிம்பல்கான் பசவந்த் – சந்த்வாட் இடையே கூட்டமாக திரண்டு மறியல் செய்தனர். இதனால் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்தது.கடும் ஆவேசத்துடன் காணப்பட்ட விவசாயிகள், சாலையில் சென்ற வாகனங்கள் மீது வெங்காயத்தை வீசி தாக்கினார்கள். வெங்காய ஏற்றுமதிக்கு விதித்துள்ள தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர்.

இதுபற்றி தகவலறிந்ததும் உயர் அதிகாரிகள் விரைந்து வந்து விவசாயிகளுடன் பேசி சமாதானம் செய்தனர். அதையடுத்து விவசாயிகள் மறியலை கைவிட்டனர்.

விவசாயிகள் போராட்டத்தினால் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து 2 மணி நேரம் வரை பாதிக்கப்பட்டது.

## அடுத்த நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறைக்கான கடன் இலக்கு 20 சதவீதம் உயர்த்தப்பட வாய்ப்பு



தீரஜ் திவாரி

புதுடெல்லி

ஒரு நாட்டின் தங்குதடையற்ற பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண் உற்பத்தி நன்றாக இருக்க வேண்டும். இதனை கருத்தில் கொண்டு, வரும் 2011–12–ஆம் நிதி ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில், வேளாண் துறைக்கு வங்கிகள் வழங்க வேண்டிய கடன் இலக்கு ரூ.4.50 லட்சம் கோடியாக உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டிற்கான இலக்குடன் ஒப்பிடும்போது இது 20 சதவீதம் அதிகமாகும்.

எட்டு மாதங்களில்...

நடப்பு நிதி ஆண்டிற்கான வேளாண் துறை கடன் இலக்கு ரூ.3.25 லட்சம் கோடியிலிருந்து ரூ.3.75 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டது. நவம்பர் வரையிலான எட்டு மாத காலத்தில், வங்கிகள், வேளாண் துறைக்கு ரூ.2,60,463 கோடி கடன் வழங்கி உள்ளன. இது, நிர்ணயித்த இலக்கில் 70 சதவீதம் என்பதால், இந்த நிதி ஆண்டுக்கான இலக்கு முழுமையாக எட்டப்படும் என வங்கிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

வேளாண் உற்பத்தி

சென்ற நிதி ஆண்டில் வேளாண் உற்பத்தி 0.4 சதவீதம் மட்டுமே அதிகரித்து இருந்தது. நடப்பு நிதி ஆண்டில் 5.4 சதவீத வளர்ச்சி ஏற்படும் என மத்திய புள்ளியியல் துறை அண்மையில் மதிப்பீடு செய்துள்ளது. நடப்பு வேளாண் பருவத்தில், உணவு தானியங்கள் உற்பத்தி 6.5 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணெய்

வித்துக்கள் (11.90 சதவீதம்), கரும்பு (15.2 சதவீதம்), பருத்தி (41.2 சதவீதம்) உற்பத்தியும் சிறப்பான அளவில் அதிகரிக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. பழங்கள், காய்கறிகள் உற்பத்தி முறையே 4.1 சதவீதம் மற்றும் 3.8 சதவீதம் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

உணவு பணவீக்கம்

இதே வளர்ச்சி வேகத்தை 2011–12–ஆம் நிதி ஆண்டிலும் நிலைநிறுத்த வேண்டுமானால், விவசாயிகளுக்கு அதிக கடன் வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனையடுத்து விவசாய கடன் அட்டைகள் வாயிலாக வழங்கப்படும் கடன் அளவையும் 30 சதவீதம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனவரி 22–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்கம் 17.33 சதவீதமாக உயர்ந்துள்ளது. தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரிப்பு, மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டு வரும் மாற்றம் போன்றவற்றால், பருப்பு வகைகள், பழங்கள், காய்கறிகள், பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவற்றிற்கான தேவைப்பாடு மிகவும் உயர்ந்துள்ளது. இதனால், உணவு பணவீக்கம் அதிகரித்து வருகிறது. எனவே, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், இத்துறைக்கான கடன் இலக்கு ரூ.4.50 லட்சம் கோடியாக உயர்த்தப்பட வாய்ப்புள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

இதில், விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் கடன் அளவு ரூ.2.70 லட்சம் கோடியாகவும், மறைமுகமாக வழங்கப்படும் கடன் ரூ.1.80 லட்சம் கோடியாகவும் இருக்கும்.

சேமிப்பு கிடங்கு

உற்பத்தியாகும் உணவு தானியங்களை, உரிய முறையில் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். எனவே, சேமிப்பு மற்றும் குளிர் பதன கிடங்கு வசதிகள் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று ஐ.டீ.பீ.ஐ. வங்கியின் செயல் இயக்குனர் பீ.கே.பாத்ரா தெரிவித்தார். குறித்த காலத்தில் கடனை செலுத்தும் விவசாயிகளுக்கு, வட்டியில் 2 சதவீத தள்ளுபடி சலுகை அளிக்கப்படுகிறது. இதனையடுத்து, குறுகிய கால பயிர் கடன்களுக்கான வட்டி விகிதம் 5 சதவீதமாக இருக்கும். நாட்டின் மக்கள் தொகையில் 60 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் வேளாண் மற்றும் அது சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கணக்கிடுவதில் வேளாண் துறையின் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது. இதனால்தான் இத்துறைக்கு அதிக கடன் வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

வசூலாகாத கடன்

கடந்த 2003–04–ஆம் நிதி ஆண்டில், வேளாண் துறைக்கு வழங்கப்பட்ட கடன் ரூ.86,981 கோடியாக இருந்தது. இது, சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் நான்கு மடங்கு அதிகரித்து ரூ.3,66,981.82 கோடியாக உயர்ந்துள்ளது.

விவசாயிகளுக்கு வங்கிகள் அதிக கடன் வழங்கும் நிலையில், கடன் வசூலிப்பதிலும் திறம்பட செயல்பட வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது. சென்ற 2010 மார்ச் மாத நிலவரப்படி, வசூலாகாத விவசாய கடன் அளவு ரூ.8,330 கோடியாகும்.

தற்போதுள்ள விதிமுறைப்படி, வங்கிகளால் வழங்கப்படும் மொத்த கடனில் 18 சதவீதத்தை வேளாண் துறைக்காக ஒதுக்க வேண்டும்.

## உற்பத்தி அதிகரிக்க உள்ளதால் பருப்பு இறக்குமதி 50 சதவீதம் குறையும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில், பருப்பு வகைகள் உற்பத்தி 14 சதவீதம் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பருப்பு இறக்குமதி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 50 சதவீதம் குறையும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நம் நாட்டில் 2.30 கோடி ஹெக்டேர் பரப்பளவில், ஆண்டுதோறும் சராசரியாக சுமார் 1.50 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதேசமயம், தேவைப்பாடு இதைக்காட்டிலும் அதிகமாக இருப்பதால், ஒவ்வொரு ஆண்டிலும் 30 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது.

சென்ற 2009–10 பருவத்தில், பருப்பு வகைகள் உற்பத்தி 1.46 கோடி டன்னாக இருந்தது.

அப்பருவத்தில் 34 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டது. அதேசமயம், நடப்பு பருவத்தில் உற்பத்தி 1.66 கோடி டன்னாக உயரும் என்பதால், இறக்குமதி 50 சதவீதம் குறையும் என வர்த்தகத் துறைச் செயலாளர் ராகுல் குல்லார் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களால், பருப்பு வகைகளுக்கான தேவைப்பாடும், பயன்பாடும் அதிகரித்து வருகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் இவற்றிற்கான தேவை சுமார் 2.50 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## விவசாய பொருட்களின் ரசாயன நச்சுத்தன்மையை கண்டறிய மதுரை, கிள்ளிகுளத்தில் பூச்சிக்கொல்லி ஆய்வுக்கூடம் துணைவேந்தர் முருகேசபூபதி தகவல்

கோவை, பிப்.10–

விவசாய விளைபொருட்களின் ரசாயன நச்சுத்தன்மையை கண்டறிய மதுரை, கிள்ளிகுளத்தில் பூச்சிக் கொல்லி ஆய்வுக்கூடம் அமைக்கப்படும் என்று வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.

வேளாண்பள்ளி

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் காய்கறிப் பயிர்களின் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பை மேற்கொள்ள வானொலி வேளாண் பள்ளி தொடங்கப்பட்டு உள்ளது. இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கி வானொலி வேளாண் பள்ளியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

காய்கறி தேவை

இன்றைய நிலையில் இந்தியாவில் உணவு தானிய பயிர்களை விட காய்கறிப்பயிர்களின் உற்பத்தி 3 முதல் 5 மடங்கு அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக குறைவான நிலம் உடைய விவசாயிகள் அதிக வருமானம் ஈட்ட காய்கறி பயிர்களை அதிகம் பயிர் செய்ய வேண்டும். நமது நாட்டை பொறுத்தவரை காய்கறி உற்பத்தி சீனா நாட்டுக்கு அடுத்தபடியாக உள்ளது. இந்தியாவில் 67 லட்சம் எக்டேரில் காய்கறி சாகுபடி செய்யப்பட்டு சுமார் 109 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. வருகிற 2025–ம் ஆண்டுக்குள் இந்தியாவில் காய்கறி தேவை 170 மில்லியன் டன்களாக உயரும் என்று

எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் நமது நாட்டில் ஆண்டு தோறும் ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் கோடி மதிப்பு உள்ள சுமார் 20 சதவீத உணவுப் பயிர்கள் பூச்சி, பூஞ்சாணம் மற்றும் நூற்புழுக்களால் சேதம் அடைகின்றன.

பயிர்பாதுகாப்பு மருந்து

நாட்டின் மொத்த சாகுபடி பரப்பளவில் காய்கறிகளின் பங்கு 2 சதவீதமாக இருப்பினும் அதில் பயன்படுத்தப்படும் பயிர்பாதுகாப்பு மருந்துகளின் அளவு 14 சதவீதம் வரை உள்ளது. இதை தவிர காய்கறிப் பயிர்களை விவசாயிகள் 12 முதல் 15 முறை ரசாயன பூச்சி மருந்துகள் தெளித்து விளைவிப்பதால் விளைபொருட்களில் அவற்றின் நச்சு தன்மை தங்கி மனிதர்களுக்கு கேடு விளைவிக்கிறது. இதை கருத்தில் கொண்டு விளைபொருட்களில் உள்ள ரசாயன நச்சு தன்மையை கண்டறிய மதுரை மற்றும் கிள்ளிகுளத்தில் உள்ள வேளாண் கல்லூரிகளில் பூச்சி கொல்லி ஆய்வுக்கூடம் அமைக்க உள்ளோம். பூச்சி மருந்துகளின் நச்சு தன்மை இல்லாத காய்கறிகளை உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும்.

புதிதாக தொடங்கப்பட்டு உள்ள வானொலி வேளாண்மைப் பள்ளியின் வாயிலாக காய்கறி பயிர்களில் பயிர்பாதுகாப்பு குறித்த 19 பாடங்கள் ஒலிபரப்பப்படும். இந்த ஒலிபரப்பை திருச்சி உள்ளிட்ட 18 மாவட்டங்களின் உள்ள விவசாயிகள் கேட்டு பயன் பெறலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

## வருகிற கோடை சீசனை முன்னிட்டு

## ஊட்டி ரோஜா பூங்காவில் செடிகள் கவாத்து செய்யும் பணி தீவிரம்

ஊட்டி, பிப்.10–

ஊட்டி ரோஜா பூங்கா வில் வருகிற மே மாதம் ரோஜா பூக்கள் பூத்து குலுங்கும் வகையில் தற்போது ரோஜா செடிகளை கவாத்து செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

ரோஜா பூங்கா

ஊட்டியில் முதல் முறையாக ரோஜா மலர்களுக்கு என தனி பூங்கா கடந்த சில ஆண்டு களுக்கு முன்பு தொடங்கப் பட்டது. இந்த பூங்காவில் சுமார் 3000 ரகத்தை சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரோஜா செடிகள் உள்ளன.

இங்குள்ள ரோஜா செடிகள் சிகப்பு, நீலம், ஊதா, மஞ்சள், பச்சை, கருஞ்சிகப்பு, ரோஸ

என பல்வேறு வண்ணங்களில் மலர்கின்றன. இந்த மலர்களின் கண்கொள்ளா காட்சியை காண ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வருகின் றனர்.

சர்வதேச விருது

ஊட்டி ரோஜா பூங்காவிற்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச ரோஜா சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சிறந்த பூங்காவிற்கான சர்வதேச விருதை வழங்கப் பட்டது. இதனை தொடர்ந்து இந்த பூங்காவை பார்வையிட வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகை புரிகின்றனர்.
ஆண்டு தோறும் மே மாதம் ஊட்டி ரோஜா பூங்காவில் கோடை விழாவை முன் னிட்டு ரோஜா மலர் கண் காட்சி நடைபெறும். அப் போது பூங்காவில் உள்ள ரோஜா செடிகளில் அனைத் திலும் பூக்கள் மலர்ந்து சுற் றுலா பயணிகளை மகிழ்விக் கும்.

கவாத்து

எனவே வருகிற மே மாதம் ரோஜா செடிகள் பூத்து குலுங் கும் வகையில் தற்போது ரோஜா பூங்காவில் ரோஜா செடிகளை கவாத்து செய்யும் பணி தொடங்கி உள்ளது. தற்போது 2 அடுக்குகளில் உள்ள ரோஜா செடிகள் கவாத்துசெய்யப்பட்டு விட்டது. கவாத்து செய்யப் பட்ட ரோஜா பாத்திகளில் நிலத்தை பண்படுத்தும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். மேலும் ரோஜா செடிகளுக்கு உரமிடும் பணியும் நடைபெற்று வருகிறது.
இதன் மூலம் வருகிற ஏப்ரல் மாதத்தில் பூக்கள் பூத்து குலுங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**பசர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,880–2,900

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
3,300–3,350

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
7,450–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,810–00

**நல்லெண்ணெய்**

குமாகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500–00
டின் (15கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
12,000.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,750–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,195.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,300.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,100.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
625–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.9–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,700 | 90.00 |
| துவரம்பருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு(வெள்ளை) | ரூ. 6,700 | 70.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (ஆவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,930 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,பிப்.9–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு–

| | | | |
|---|---|---|---|
| 1. | வி.797 22எம்.எம் | ரூ. | 11,951 |
| 2. | ஜெயதர் 22 எம்.எ | ரூ. | ——— |
| 3. | ஜெ 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 14,600 |
| 4. | எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. | 15,185 |
| 5. | சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 15,466 |
| 6. | எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 15,747 |
| 7. | டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 21,034 |

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.9–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 40–00 | புதினா | ரூ. | 16–00 |
| கத்தரிக்காய் | ரூ. | 20–24 | காலிப்பிளவர் | ரூ. | 18–20 |
| வெண்டைக்காய் | ரூ. | 36–40 | பொறியல் தட்டை | ரூ. | 18–20 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 8–9–10 | பச்சை மொச்சை | ரூ. | 22–00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 7–8 | தேங்காய் | ரூ. | 8–14 |
| புடலை | ரூ. | 14–18 | பட்டாணி | ரூ. | 44–70 |
| பீர்க்கன்காய் | ரூ. | 22–24 | பூண்டு | ரூ. | 270–00 |
| சுரைக்காய் | ரூ. | 12–14 | கறிவேப்பிலை | ரூ. | 50–52 |
| பாகற்காய் | ரூ. | 12–14 | அகத்தி | ரூ. | 14–00 |
| கொத்தவரை | ரூ. | 22–24 | வாழைக்காய் | ரூ. | 16–00 |
| பூசணிக்காய் | ரூ. | 17–00 | திராட்சை | ரூ. | 30–54 |
| அரசாணிக்காய் | ரூ. | 11–12 | குடைமிளகாய் | ரூ. | 28–00 |
| பேராக்காய் | ரூ. | 16–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 20–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 32–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20–00 | கறிபீன்ஸ் | ரூ. | 22–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 36–40 | பட்பீன்ஸ் | ரூ. | 26–28 |
| பெரியவெங்காயம் | ரூ. | 20–00 | காளான் | ரூ. | 80–140 |
| இஞ்சி | ரூ. | 32–55 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10–13 |
| முருங்கைக்காய் | ரூ. | 110–00 | சப்போட்டா1கிலோ | ரூ. | 15–16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18–24 | கொய்யா1கிலோ | ரூ. | 22–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20–00 | மாதுளை1கிலோ | ரூ. | 170–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15–16 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 80–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | ஆப்பிள் | ரூ. | 90–100 |
| சக்கரவள்ளி கிழங்கு | ரூ. | 14–00 | சாத்துக்குடி | ரூ. | 28–00 |
| முள்ளங்கி | ரூ. | 8–12 | நெல்லிக்காய் | ரூ. | 20–10 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 30–34 | ஆரஞ்சு | ரூ. | 48–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 20–30 | வெள்ளரி | ரூ. | 13–32 |
| நூல்கோல் | ரூ. | 18–20 | புளி 1 கிலோ | ரூ. | 70–00 |
| கொத்தமல்லி | ரூ. | 20–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–00 |
| ட்ரின்பீன்ஸ் | ரூ. | 18–20 | அவரை | ரூ. | 18–20 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | மக்காச்சோளம் | ரூ. | 12–18 |
| காலிகோஸ் | ரூ. | 26–00 | துவரை | ரூ. | 20–00 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,பிப்.9–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 85.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1220 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1530 | 100.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,730 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 63.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| வில்வி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | – |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.630.00 | ரூ. 700.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 4.00 | ரூ. 6.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.20.00 | ரூ.28.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.4.00 | ரூ.8.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.20.00 | ரூ.8.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.22.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| பேராக்காய் | ரூ.7.00 | ரூ.10.00 |

**பட்டுக்கூடு**

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.310.00 | அதிகபட்சவிலை | ரூ.420.00 |
| சராசரி விலை | ரூ.309.99 | சராசரி விலை | ரூ.388.99 |
| குறைந்தபட்சவிலை | ரூ.310.00 | குறைந்தபட்சவிலை | ரூ.355.00 |

**பட்டு நூல் ரூ.2,640**

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.20700 |
| மிளகு (சேட்டன்) | ரூ.21100 |
| மிளகு (வயநாடன்) | ரூ.21700 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 8500 |
| சுக்கு(புதியது) | ரூ.10000 |
| சுக்கு(பழையது) | ரூ.7500 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9350 |
| கொப்பரை நாடன் | ரூ.6800 |
| கொப்பரை ராசு | ரூ.6950 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6850 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.7700 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22700 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23700 |
| ரப்பர் பால் | ரூ. 15100 |
| காப்பி | ரூ. 9000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2850 |
| நேந்திரகாய் | ரூ. 1100 |
| இஞ்சி | ரூ. 1350 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,048.00 | 15,224.00 | 15,240.00 |
| ஒரு கிராம் | 1,881.00 | 1,903.00 | 1,905.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 46115.00 | 48,500.00 | 48,000.00 |
| ஒரு கிராம் | 49.35. | 48.50 | 48.00 |

**ஒழுங்கு முறை விற்பனை கூடம்**

**பருத்தி (அன்னூர்)**

| | |
|---|---|
| டி.சி.எச் | ரூ.6600–6930 |
| ஆர்.சி.எச். | ரூ.5800–6800 |
| எம்.சி.யு.5 | ரூ.6100–6150 |
| எல்.ஆர்.ஏ. | ரூ.5250–6600 |

**மஞ்சள் (கோவை)**

| | |
|---|---|
| தனிவிரலி | ரூ.10616–13200 |
| தனிகிழங்கு | ரூ.11536–13000 |

**தேங்காய்**

| | |
|---|---|
| அன்னூர் | ரூ.700–800 |
| தொண்டாமுத்தூர் | ரூ.600–700 |
| பெதப்பம்பட்டி | ரூ.500–600 |
| நெகமம் | ரூ.600–900 |
| ஆனைமலை | ரூ.500–700 |
| பொள்ளாச்சி | ரூ.500–900 |
| மடத்துக்குளம் | ரூ.500–500 |

**தேங்காய் பருப்பு**

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.6000–6200 |

**மக்காச்சோளம்**

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.910–960 |
| உடுமலை | ரூ.980–1000 |
| அன்னூர் | ரூ.960–1020 |
| மடத்துக்குளம் | ரூ.960–980 |

**நெல்**

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.850–1020 |

**கொண்டக்கடலை**

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.2800–2900 |



# வேளாண்மை செய்திகள்

**விவசாயிகளுக்கு**

## நிரந்தர வருமானம் தரும் 'பெருநெல்லி' சாகுபடி



ஆயுர்வேத மருத்துவத்தில் பல்வேறு நோய்களுக்கு மருந்து தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருவது பெருநெல்லி. இதில் வைட்டமின் 'சி' சத்து நிறைந்து உள்ளது. சையவன் பிரஷ், திரிபால சூர்ணா, பிரம்ம ரசாயனா, மதுமேக சூர்ணா ஆகிய மருந்து பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**பெருநெல்லி**

பெருநெல்லியில் நோய் எதிர்ப்பு சக்தி, நீரழிவு நோயை கட்டுப்பாடு, வயிற்றுப்போக்கை நிறுத்துவது, ஸ்கார்வி என்ற வைட்டமின் சி குறைபாடு ஆகியவற்றை குணப்படுத்தும் குணங்கள் உள்ளன. ஆயுர்வேத மாத்திரைகள், தலைமுடி எண்ணெய், அழகு சாதன பொருட்கள் தயாரிக்கும் மூலப்பொருளாக பெருநெல்லி பயன்படுகிறது. மேலும், பர்பி, லட்டு, மூலிகைச்சாறு தயாரிக்கப்படுகிறது. பெருநெல்லி ஊறுகாய் நாடு முழுவதும் பிரபலம். பெருநெல்லி மருத்துவம் மற்றும் உணவுக்காக பயன்படுத்தப்படுவதால் தேவை அதிகரித்து வருகிறது. பெருநெல்லியை சாகுபடி செய்யும் விவசாயிகள் சிறப்பாக பலனை அடைந்து வருகிறார்கள். பொதுவாக பெருநெல்லி கடினமில்லாத, மிதமான, கடினமான என அனைத்து மண்வகைகளுக்கும் ஏற்றது.

**சாகுபடி நிலங்கள்**

வறட்சியான பகுதிகள், உவர்ப்பு நிலங்கள் சாகுபடிக்கு ஏற்றவை. வறட்சியான தட்ப, வெட்பநிலை, ஆண்டுதோறும் 630 முதல் 800 மில்லி மீட்டர் மழையளவு ஆகியவை இருப்பின் பயிர் வளர்ச்சி நன்றாக இருக்கும். பெருநெல்லியில் பனாரசி, சாக்கியா, பிரான்லிஸ், என்.ஏ. 4, 6 மற்றும் 7, பி.எஸ்.ஆர். ஆகிய ரகங்கள் பயிரிட ஏற்றது. கன்றுகளை நடவு செய்ய ஏக்கருக்கு 200 கன்றுகளும், எக்டேருக்கு 500 கன்றுகளும் தேவைப்படும். பயிர் வளர்ச்சிக்கு உரம், தொழு உரம், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்துக்களை பயன்படுத்த வேண்டும். நடவுக்கு முன் தேர்வு செய்த நிலத்தில் 15 கிலோ தொழு உரம், ½ கிலோ சாம்பல் சத்தையும் போட்டு நடவு செய்ய வேண்டும்.

**நீர் பாசனம்**

நடவு செய்த நாளில் இருந்து 10 ஆண்டுகள் வரை செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் தொடர்ந்து தழைச்சத்து அளிக்க வேண்டும். கோடை காலத்தில் 15 நாட்களுக்கு ஒருமுறையும், காய்ப்பு காலத்தில் வாரம் இருமுறையும், மழை காலத்திற்கு பின் சொட்டுநீர் முறையிலும், நீர் பாசனம் செய்ய வேண்டும். கோடை காலத்தில் மரக்கன்றுகளுக்கு பாதுகாப்பாக வைக்கோல்களை கொண்டு நிலத்தை போர்த்தி வைக்க வேண்டும். பயிர்களை தாக்கும் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை கொண்டு கட்டுப்படுத்த வேண்டும். நடவு செய்த 2 ஆண்டுகளில் பெருநெல்லி காய்க்க ஆரம்பித்து விடும்.

**அறுவடை**

காய்கள் இளம்பச்சை நிறத்தில் இருந்து மஞ்சள் கலந்த பச்சையாக மாறியவுடன் அறுவடை செய்யலாம். நீளமான மூங்கில் குச்சிகளில் கொக்கிகளை கொண்டும் பறிக்கலாம். 10 வயதான மரத்தில் இருந்து 60 முதல் 70 கிலோ வரை காய்கள் கிடைக்கும். 1 கிலோவில் 15 முதல் 20 காய்கள் வரை இருக்கும். பெருநெல்லி மரங்களை முறையாக பராமரித்து வந்தால் 70 ஆண்டுகள் வரை மகசூல் தரும். இது விவசாயிகளுக்கு நிரந்தர வருமானத்தை கொடுக்கும்.

பெருநெல்லி மரங்களுக்கு இடையே பச்சைப்பயிர், உளுந்து, தட்டைப்பயிர், கொள்ளு ஆகியவை ஊடுபயிராக பயிரிட ஏற்றது. எனவே விவசாயிகளுக்கு இந்த பயிர் ரகங்களை ஊடுபயிராக பயிரிடுவதன் மூலம் உதிரி வருமானம் பெற்று லாபம் அடையலாம்.

## மக்காச்சோளம் விதைக்க ஏற்ற பட்டம் எது?

மக்காச்சோளத்தை விதைக்க ஏற்ற பட்டம் எது என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் விளக்கம் அளித்து உள்ளது.

**மக்காச்சோள உற்பத்தி**

தமிழ்நாட்டில் பெரம்பலூர், திண்டுக்கல், கோவை, சேலம், ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மாவட்டங்கள் தமிழ்நாட்டின் மக்காச்சோள சாகுபடி பரப்பில் 77 சதவீதத்தை கொண்டு உள்ளன.

இதன்படி மக்காச்சோளம் விதைக்க தை பட்டம் ஏற்றதாகும். நீர்பாசன வசதி உடைய விவசாயிகள் இந்த பட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்வார்கள்.

தற்போது தமிழ்நாட்டில் மக்காச்சோளம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.920 முதல் ரூ.940 வரை விற்பனை செய்யப்படுகிறது. கோழித்தீவன நிறுவனங்கள் இருப்பு வைத்துக் கொள்வதற்காக மக்காச்சோளத்தை வாங்கத் தொடங்கி உள்ளனர். தற்போது உள்நாட்டு தேவை மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளால் மக்காச்சோள விலை சீராக இருக்கும் என்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய வேளாண்மை புதுமை திட்டம் கணித்துள்ளது.

**விலை முன்னறிவிப்பு**

இதன்படி வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள உள்நாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த நவம்பர் மாதம் முதல் இந்த மாதம்(பிப்ரவரி) வரை நிலவிய மக்காச்சோளத்தின் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.925 முதல் ரூ.975 வரை இருக்கும் என்று முன்னறிவிப்பு செய்து உள்ளது.

இதன் அடிப்படையில் உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனையான மக்காச்சோளத்தின் விலையை ஆய்வு செய்தது.

இதில் வருகிற ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை மக்காச்சோளம் விலை உயர்ந்து குவிண்டால் ஒன்றுக்கு ரூ.950 முதல் ரூ.1,150 வரை இருக்கும் என்று கணித்து உள்ளது. தற்போது அறுவடை செய்து வரும் மக்காச்சோளத்தை ஏப்ரல் மாதம் வரை இருப்பில் வைத்து விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்றும் கூறியுள்ளது.

நன்கு காய வைத்த மக்காச்சோளத்தை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களிலோ அல்லது வேளாண் கூட்டுறவு சங்கங்களில் கிடங்குகளிலோ சேமித்து வைக்கலாம். தைப்பட்டமான இந்த பட்டத்தில் சாகுபடி செய்யும் போது பெரிய மணிகளை உடைய ரகங்களை வீரிய ஒட்டுரகங்களை பயிரிட்டு பயன் அடையலாம் என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் விளக்கம் அளித்து உள்ளது.

## அறுவடை செய்த தேங்காயை உடனே விற்பது நல்லது

### விவசாயிகளுக்கு, வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

அறுவடை செய்த தேங்காயை உடனே விற்பது நல்லது என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

**தேங்காய் உற்பத்தி**

உலக அளவில் வருடத்துக்கு 5 மில்லியன் டன் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் இந்தோனேசியா, பிலிப்பைன்ப்ஸ் மற்றும் இந்தியா அதிக அளவில் தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளாகும். இந்தியாவை பொறுத்தவரை தேங்காய் உற்பத்தியில் கேரள மாநிலம் முதல் இடத்தை வகிக்கிறது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

தமிழ்நாட்டை பொறுத்தவரை கோவை, தஞ்சை, திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, நெல்லை, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் தென்னை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இதில் கோவை மாவட்டம் முதல் இடத்தை வகிக்கிறது.

**விலை ஆய்வு**

இந்த நிலையில் விவசாயிகள் தற்போது தேங்காய் அறுவடை செய்து வருகின்றனர்.

அவ்வாறு அறுவடை செய்யும் தேங்காய்களை உடனே விற்கலாமா அல்லது சேமித்து விற்பனை செய்யலாமா என்ற சந்தேகத்தில் உள்ளனர். இவர்களது சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் விதத்தில் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த 10 ஆண்டுகளாக பொள்ளாச்சி சந்தையில் நிலவிய விலைகளை ஆய்வு செய்தது.

இதன்படி இந்த மாதம் 2–வது வாரத்தில் தேங்காய் விலை அதிகரித்து அதன் பின் படிப்படியாக குறைய வாய்ப்பு உள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக தென்னை மரங்களின் காய்பிடிப்பு பாதிப்படைந்தது.

**கொப்பரை தேங்காய்**

இதன் காரணமாக கொப்பரை தேங்காய் குறைபாடு மற்றும் பண்டிகை தேவை ஆகியவை தேங்காய் விலையை இந்த மாதம் 3–வது வாரம் வரை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,125 முதல் ரூ.1,350 வரை என்ற நிலையில் இருக்கும் என்றும், அதன் பிறகு விலை குறைந்து வருகிற மார்ச் மாதம் குவிண்டாலுக்கு ரூ.1,050 முதல் ரூ.1,275 வரை நிலவும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவே தற்போது அறுவடை செய்யும் தேங்காயை உடனே விற்பது நல்லது என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

## விவசாய கேள்வி பதில்

**கேள்வி:** நான் பி.எஸ்சி ஊரக வளர்ச்சி அறிவியல் படித்துள்ளேன். ஒருங்கிணைந்த பண்ணை ஒன்றை தொடங்க விரும்புகிறேன். இது லாபகரமாக இருக்குமா?

**சிவநேசன், பொள்ளாச்சி.**

**பதில்:** தற்போது விவசாயத்தில் லாபம் இல்லை என்ற நிலை இருந்து வருவதாக சொல்லப்படும் நிலையில் ஒருங்கிணைந்த பண்ணை முறை சிறப்பான பலன் அளிக்கும். இந்த முறையில் வேளாண்மையுடன் அது சார்ந்த தொழில்களான கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் சிறிய இடத்தில் மீன்வளர்ப்பு போன்றவற்றை மேற்கொள்ளலாம். இதனால் ஆண்டு முழுவதும் வருமானம் வந்து கொண்டிருக்கும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இங்கிருக்கும் பெரும்பாலான விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கும் குறைவான நிலங்கள் இருப்பதாக தெரியவந்தது.

இந்த ஒரு எக்டர் நிலத்தில் 80 சதவிதத்தை வேளாண்மைக்கும் 20 சதவித நிலத்தை கால்நடை வளர்ப்புக்கும், கால்நடை தீவன வளர்ப்புக்கும் பயன்படுத்தினால் நல்ல லாபம் இருப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவித்தன. கால்நடை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் எரு நிலத்தை வளப்படுத்த உதவும். ஆக உரச்செலவை குறைக்கலாம். இப்படி பல பயன்கள் ஒருங்கிணைந்த பண்ணையில் இருக்கிறது. தற்போது வேளாண் பயிற்சி மையமான வாப்சில் இது போன்ற லாபகரமான விவசாய தொழில்களுக்கான பயிற்சியும் திட்ட அறிக்கையும் உங்களுக்கு கிடைக்கும். அவர்களை நீங்கள் 0452 2538 642 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள். பால் விலையை பார்த்தால் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவம் உங்களுக்கு தெரிய வரும். நமது நாட்டில் ஏராளமான தரிசு நிலங்கள் இருந்தும் அதை இன்றைய இளைஞர்கள் சரியாக பயன்படுத்த முன்வராதது தான் துரதிர்ஷ்டம்.

**கேள்வி :** நான் பருத்தி பயிரிட்டுள்ளேன். அதில் இளஞ்சிவப்பு காய்ப்புழு காணப்படுகிறது. என்ன மாதிரியான கட்டுப்பாட்டு முறைகளை கையாளலாம்?

**மருதமுத்து, கோவை.**

**பதில்:** உங்கள் பயிரில் தற்போது காய்பிடிக்கும் நிலையில் அல்லது முற்றும் தருணத்தில் அதாவது 100 நாட்களுக்கு பின் இளஞ்சிவப்பு காய்புழுவின் தாக்குதல் இருந்தால் ஏக்கருக்கு ஒரு லிட்டர் டிரையோசபாக் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் தெளிப்பு கரைசலுக்கு ஒரு மிலி டீ, பால் என்கிற அளவு ஒட்டும் திரவத்தை கலந்து தெளிக்கலாம்.

**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர், வேளாண்மை செய்தி பிரிவு, தினத்தந்தி, கோவை–18**

